
"இருப்பது ஒன்றே"!
"நடப்பது நலமே!
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# "இருப்பது ஒன்றே!"
# "நடப்பது நலமே!"


இதழ் ஒன்று. I

# பொருளடக்கம்

1. கேள்வி, பதில்---------------------------------------------------1

உ. பர உணர்வு-----------------------------------------------------16

எல்லாம் நீ!



(ஸத்திய வாக்கை) (1)

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை பெறும்!

"ஸ்ரீஸத்குரு திருவடி துணை"! "நம்பினோர் கெடுவதில்லை"!

"தெய்வம் மனுஷ்யாணாம்"! "யத்பாவம் தத்பவதி"!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்," ஓம்!


"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே சிவமாம்"!

ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!

ஓம் ஆத்மானந்த, பரிபூரண குழந்தைகளே!

அடங்கி வாழ்ந்தலினால், உங்கள் சாதனை, முற்றுப் பெற்று, ஜீவன் முக்தி பெறுவீர்கள் என்றும், வெற்று விட்டீர்கள் என்றும்; ஆசி கூறி, வாழ்த்துகிறோம்!

உங்களுக்கு முற்கவன சக்தியும், நற் காப்பு சக்தியும் வேண்டாம் என்றும், தற்கவன சக்தி வேண்டும் என்றும். உங்கள் அனைவரின், திருப் பாதம் பற்றி வேண்டிக் கொள்கிறோம்! பணிவே பாதையாக கொண்டால், அனைத்தும் சித்திக்கும், என உணருங்கள். அதற்கு, பொறுமையே, உங்கள் நண்பனாகும்.




ஓர் அன்பு குழந்தையின் கேள்வி:- ஹே அன்பான பாபாவே! உண்மை பக்தாள், சொல்லும் வாசகம் யாதெனின், நீ எந்த விநாடியும், ஸ்ரீபகவன் நாமஸ்மரணையுடன் இருந்தாலும், உன் மரணத்தருவாயில், அதாவது பிராணன் பிரியும் போது, அந்த விநாடி, ஸ்ரீபகவன் நாமஸ்மரணை, வேண்டும் என்றும், அது சமயம், ஸ்மரணை கெட்டால், அந்த விநாடி, உன் எண்ணம், எதுவோ, அந்த ஜன்மா உண்டென்றும், ஸ்ரீமஹான்களும், தாங்களும் சொல்கிறீர்கள்.

அது பற்றிய சந்தேகம்?

சிலர் எந்த அவஸ்தையும் இல்லாமல், பிராணன் சென்று விடுகிறது. சிலர் கடும் அவஸ்தைபடுகிறார்கள். அதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். அவ் வேதனை காலங்களில், இறை குரு ஸ்மரணை வருவது மிக மிக மிக கடினமானது. அதற்காகத்தான், அதை மரண அவஸ்தை என, சொன்னார்கள் போலும்? எம் கேள்வியாவது?

(1) அவஸ்தைக்கு, மாற்று உபாயம் உண்டா?

(2) அவ்வவஸ்தையிலும், இறை குரு உணர்வுடன், இருக்க முடியுமா?



௩

(௩) இப்போதுள்ள, இறை குரு ஸ்மரணை, அப்பேற்றை கொடுக்குமா?

இம்மூன்று கேள்விகளுக்கும், எளிய முறையில், நாங்கள் உணரும் நிலைக்கு, விடையருளினால், நல்ல பயனாக இருக்கும்?

ஓர் வைத்தியத்தின் பதில் :- குழந்தாய்! இது நல்ல பயனுள்ள கேள்வியே. கவனம் தேவை. உணர்வால் உணர். உன் கேள்வியானது, இரு நிலைகளில் பயன்படும்.

(1) ஆழமான கரைந்து, உணர்ந்த பக்தி!

(2) ஓர் ஸத்குரு மூலமாக, உணர்ந்த ஆத்ம ஞானம்!

(1) ஆழமான கரைந்து, உணர்ந்த பக்தி:- இப்பக்தி நிலைக்கு, ஓர் ஸ்ரீ ஆழ்வாரின், ஸத்திய அமுத வாக்கு :- உடல் நலிந்து (கெட்டு) கண் இருண்டு, காது அடைபட்டு, தொண்டை அடைத்து, மூச்சு திணறி, செய்வது அறியாது, ஓர் மிரட்சியான பயம் வந்து, எம்மை கொளவும் போது, அவ்வேளை எம்பிரபோ! உன்னை நினைக்க முடியுமோ? முடியாதோ?



உ

யாம் அறியோம். அதை இப்போது, கற்பனை செய்து பார்த்தாலும், அதை வரிவடிவில் எழுத முடியவில்லை. அத்தகைய, கடினபயம், இப்போது தோன்றுகிறது.

ஆகவே?

எம் கருணைக் கடலே! கிருபா ஸாகரமே! ஆனந்த மணிவண்ணா! எம் கமலக்கண்ணா! கமல நயனா! உம் ஸ்ரீ பத்ம பாதங்களை, இப்போதே கெட்டியாக பற்றிய நிலையில், கதறி அழுது, உருகி முறையிடுகிறோம்.

"அப்போதைக்கு இப்போதே"

"சொல்லி வைத்தோம்!!!"

"அரங்கமா நகருளானே!"

என சொல்லி! நமோ நாராயணா! நமோ நாராயணா! நமோ நாராயணா! என மும்முறை அலறி, அழுது அர்ச்சனம், முடித்துக் கொண்டார். ஆனால் தொண்டர் நிலையில், அவனைப் பாடித் தொழுதல் அல்லாது வேறொன்றும் அறியார். ஆனால் பிராரப்த தாவந்






சஞ்சார காலங்களில், அவன் பொருள். அவன் செயல். அவனன்றி அணுவும் அசையாது. என்பதையும், உணர்வால் உணர்வு நிலையில் இருந்தார். குற்றம் குறை. பேதாபேதம். விருப்பு வெறுப்பு. இவைகளை அடியோடு ஒழித்தார். நான். என்னுடை. எனதை. விட்ட நிலையில், இருந்தார். இந்நிலையில், மனம் பாரம் இல்லாமல் லேசாக இருந்த தன்மையினால், அந்திய காலத்தில், வினை வசத்தால், தாவம் நலிந்து நைந்து மெலிந்து, போகும்போதும், ஸ்ரீ பகவன் நாம ஸ்மரணை, கெடாமல் இருந்தார். ஆனால் மரணகால அவஸ்தையினால், மூக்கல் முனங்கல் பரதவிப்பு, பார்ப்பவர் உள்ளங்களை திடுக்கிட வைக்கும். காரணம்? பார்ப்பவர்களாகிய இவர்களிடம், மனம் வேறு பார்க்கிறது.


(அதாவது ஓர் மஹான், இப்படி அவஸ்தைப்படுகிறாரே, என்று எண்ணத்தான் தோணும்)

இங்கு கள்ளமனம், அனைத்தும் முனங்கும் சஞ்சல பாவனை, தோற்றத்தான் செய்யும். ஆனால் நல்லமனம்,



வெளியில் தோன்றாமல், அவரோடு ஒன்றி இருக்கும் இதை அவர் ஒருவரே அறிவார். ஏனையோர் அறியார். இங்கு மனம், அழியாத்தன்மையால், இங்கு மனம் இரண்டுபடுகிறது. இங்கு இவருடைய, புண்ணிய தர்மத்திற்கு ஏற்றபடி, உயரிய பிறவியோ, பதமுக்தியோ, அவஸ்யம் உண்டு.


௨ ஓர் ஸத்குரு மூலமாக, உணர்ந்த ஆத்ம ஞானம்:—
இங்கு இவருக்கு, ஞானபாடத்தின் மூலம், இவருடைய தெளிநிலை, எப்படி இருக்கும் என்றால்? முன்கூறியவரின், பக்தி நிலையில், இவரும் ஸ்வய அனுபவம், பெற்ற நிலையில், இங்கும் இவரிடமும், முன் கூறிய நிலையில், இரண்டுமனம் உண்டு, என்பதும் ஸத்தியமே. ஆனால் ஸத்குருவின், வாக்கிய சிரத்தையினால், நாமரூப, உடல் உறவு பொருள் அனைத்துமே, பொய் என்ற தன்மையினால், மனம் இரண்டுபட்டாலும், நாமரூபம் பொய் என்றும், அந்த ஒன்றுக்கு அவை அன்னியமில்லை என்றும், அந்த ஒன்றே நாம் என்றும், நாமே அந்த ஒன்றென்றும், சுத்த "அத்வைத"



நிலை ஸ்வயமாகவே, வெற்று விட்ட தன்மையால்,
அவ்விரு மனமும் அழிந்து, மறைந்தாகி விடுகிறது.
அங்கு மனம், அடங்குகிறது. ஆகவே பிறவி உண்டு.
இங்கு மனம் அழிகிறது. ஆகவே பிறவி இல்லை.
ஆனால் இங்கு, ஓர் விஷேசம், என்னவென்றால்?
வினை விதி வசத்தால், தாவம் நைந்து பிய்ந்து,
கடும் அவஸ்தைப்பட்டாலும், ஜீவன் முக்தியில்,
மனம் ஒன்றிய தன்மையால், முன் இவர் கேட்டு
மனனம் செய்து, நிதித்தியாசம் (அனுபவம்)
பெற்ற நிலை, "அறிவு" பூர்வமாக, உள்ளே
பதிவேடாகி இருப்பதால், அது அதன் காரிய
த்தை, கவனித்துக் கொள்ளும்.

இங்கு?

மனம், புத்தி, சித்தத்தால்; தருமாற்றம்
உள்ளதாக (அவஸ்தைப்படுவதைப் போல்)
தோற்றினாலும், அவர் அவஸ்தைப்படவில்லை.
அவர் அறிவாகவே இருக்கிறார். ஆகவே ஜனனம்,
இல்லை யென்பதே ஸத்தியம், எனவே மஹான்கள் சொல்வர்.





இங்கு ஓர் உண்மை என்னவென்றால்?
அதீதமான, அத்வைத ஞானமானது, அதிரகஸ்யமாக
பாதுகாக்கப்பட்டு வருகிறது.
ஆனாலும் "பிரமாணமாக" சொல்கிறோம். சாதனா காலங்களில்,

(1) நான், என்னை, எனது, என்பது முழுமையாக,
அழிந்திருக்க வேண்டும்.

(2) நாமரூப, ஜகத், ஜீவ, தோற்றம், இருப்பு, இயக்கம்,
ஸ்ரீபகவானுடையதே என்ற, உணர்வு இருக்க வேண்டும்.

(3) சாதனா காலங்களில், எது நடந்தாலும், அங்கு
மனம், அசைவற்று இருக்க வேண்டும்!

(4) இவை அனைத்திலும், எல்லாம் (நாமரூப,
ஜகத், ஜீவ சொரூபங்கள், ஈஸ்வராதிகள்) பரமாகிய
மண்ணே என்றும். மண்ணாகிய பரமே என்றும்.
நாம் அதுவே! அதுவே நாம்! என்ற அத்வைத,
அனுபவ உணர்வு, மாறாமல் மறையாமல்,
ஸ்திரமாக இருக்க வேண்டும்.

(5) எதை எதை. எப்படி எப்படி, எங்கெங்கே. எந்
நிலையிலும், கண்டாலும், கேட்டாலும், பேசினாலும்,



(9)

உ


# "தத் த்வம் அஸி"!

என்ற நிலையில், ஸ்ரீ பரமாத்மாவாகிய, ஸ்ரீ பகவானே நாம்! நாமே பரமாத்மாவாகிய ஸ்ரீ பகவான்! நாமும் ஸ்ரீ பகவானும், அதற்கு அன்னியமில்லை என்ற, "பேரறிவின்" மெய்யுணர்வு, அனுபவம் குறையாமல், இருக்க வேண்டும்!

(A) மேலே கூறிய ஐந்தும், மாறாமல், மறையாமல், குறையாமல், நிறைவாக உள்ளே இருக்கும் பக்ஷத்தில் இந்த ஸத்திய உணர்வு, உள்ளே மாணிக்கம் போல் பிரகாசிக்கும்.

(B) வெளி சரீர தோற்றத்தில், அவஸ்தை தோற்றினாலும் அவை மற்றவர்களுக்காக, மாயா காட்டுகிறதென்று, அனுபவ ஞானிகள், சொல்லக் கேள்விப்படுகிறோம்.

(C) மரண அவஸ்தை காலங்களில், முக்கல் முனகல் இருந்தாலும், ஈன வாஸனை, வார்த்தைகள், அங்கு இருக்காது! இருக்க முடியாது! இருக்க இயலாது! அப்படி இருக்குமாயின், இவர் சாதனை சரியில்லை என்பது, ஸத்தியம் என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.



இங்கு சில உண்மைகளை, உரைக்கிறோம். கவனம் தேவை

(1) நற்காப்பு சக்தியும், முற்கவன சக்தியும் கூடாது. நற்கவன சக்தி வேண்டும்!


(2) ஓர் சாதனையாளனுக்கும், மரண அவஸ்தை வரும் போது, வினையின் படி, சரீரம் நைந்து, பிய்ந்து, மெதுவாக நலிந்து, தான் போகும்.

(3) அவனுடைய, இறைகுரு, உணர்வு, ஸத்தியமானவை. அவை, சில விடைகளே தோற்றும். அவைதானே, மாறும், மறையும்.

(4) அவனுடைய சாதனையின் பலன், அவனை உள்முகமாக காக்கும். வெளி முகத்தில், அதை எவர்க்கும், சொல்ல முடியாது. (சொல்ல இயலாது.) அது தேவையில்லை.

(5) அச்சாதகனுக்கு, இறை குரு உணர்வே (பலகால பழக்க வழக்க நியதியில் (பேச்சு & செய்கை)) பலம் ஆகும். அதில் நம்பிக்கையும், வைராக்கியமும் வேண்டும்.

(6) அச்சாதகனுக்கு, அந்தர்யாமி (சாட்சி நிலை) சர்வாந்தர்யாமி (சர்வ சாட்சி) அதிஅதி ரகஸ்யமாக ரக்ஷிக்கும்!






(7) சரீர நலிவு என்பது, வெளிமுக தோஷம் (கலி தோஷ குணங்கள்)
கொண்டது. அகந்துன்பம், வேதனை, கடும் அவஸ்தை, உள்முகமாக இருப்பதால், சாதனை காலங்களில், பொறுமை, அன்பு, கருணை, கனிவு, பணிவு இவை இருந்தால், பாதிப்பு நேராது!

(8) அகவுணர்வு, கெடாதிருக்க வேண்டுமானால், சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! சாதனை காலங்களில், உறுதி ஆக வேண்டும்.

(9) தன் உடல் மீதும், சொந்த பந்த உறவு மீதும், அதிக பிரியம், வைக்க வா காது. அவரவர் விதியின் படி, ஒழுங்காக நடக்கும், என்ற உறுதி வேண்டும்!

(10) பற்று வரவு கழிகிறது, என்ற மெய்யுணர்வில்தான் உபாதையில், வாய் வெளிமுகமாக, புலம்பாதலும், அகவுணர்வு, ஆனந்தமாக இருக்க முடியும்.

(11) எல்லாம் அவன் செயல்! அவன் பொருள்! என்ற இந்த, ஒன்றில் மட்டும், தூல அவஸ்தை, வெளியே பிறருக்கு தோன்றினாலும். அவன் அகஉணர்வோடு, இருக்க முடியும். இதை சொல்லவோ விளக்கவோ, எவராலும் முடியாது!





இனி உன் கேள்வியின் பதில்?

(1) தூல அவஸ்தைக்கு, மாற்று உபாயம் உண்டா?


பதில்:— சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! தான், அதற்கு மாற்று உபாயம், இவ்விரண்டும், புறமுக உணர்ச்சியை, காட்டினாலும், அகமுக உணர்வைக் கொடுக்கும்! புற உணர்ச்சியை கெடுக்கும்!

(2) அம்மரண அவஸ்தையிலும், இறை குரு உணர்வுடன் இருக்க முடியுமா?

பதில்:— அவஸ்யம் இருக்க முடியும். இது ஜீவன் முக்தி என்ற, ஆன்ம ஞான சாதகர்களுக்கு, மட்டும் முடியும். அது "மறைபொரு" ளாய்! இருக்கும். எவரும் அறியவும் உணரவும் முடியாது.

(3) இப்போதுள்ள, இறைகுரு நாம ஸ்மரணை, அப்போது கைகொடுக்குமா?

பதில்:— அவஸ்யம் கைகொடுக்கும். இங்கு உன் இறை குருநாமஸ்மரணையானது, எந்த எதிர்பார்ப்பும்




(13)

இல்லாமல்
அதாவது வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம், இல்லாமல், எளிமையாகவும், பிறரைக் கண்டு கொள்ளாமலும், முழு நம்பிக்கையுடனும், திட வைராக்கியத்துடனும் இருந்தால், அவசியம் தை கொடுக்கும்!

எப்படி என்றால்?

(1) ஸ்ரீபகவான் சொரூபமானது, பக்தர்களுடைய (நினைந்த வடிவில் கருதினும், அந்த வடிவில் தோன்றுவார்! (தமக்கென) சொந்த வடிவம் பெயரில்லாத (நாமரூபம் இல்லாதவர்) சுத்த மோன சின்மயமாம் என்னை உருகியினால், காவாந்த அதுவே ஓர் வடிவம் தாங்கி, வருகிறது என்பதே சத்தியம் அது செயல்படாது என்பதும், அவன் செயல்படுவான், என்பதுவும், இங்கே பொருந்தும்.


இங்கு, மரண அவஸ்தை வரும்போது, உண்மையான பக்தனுக்கு ஸ்ரீபகவன் நாமமாவே பலமாகவும், பலனதவும் அமைவதால், டாக்டர் ஓர் மயக்க





ஊசிபோட்டு, அறுவை சிகிச்சையை, சுகமாக
செய்வதுபோல; அப்போதைக்கு இப்போதே சொல்லி
வைத்தோம்! என்ற மெய்யன்பர்களின், வாக்கை
ஸத்தியமாக்கிக் கொண்டு,
அவஸ்தை, வெளியில் உள்ளவர்களுக்கு தோற்றினாலும்,
அகவுணர்வில் தோற்றாவண்ணம், அவன் ரஸனை
யாக அமைவான். அச்சூழ்நிலை, ஸ்ரீபகவன் நாமா
வந்தாலும், வரா விட்டாலும்; அதுபாதகமில்லை
என்பதே, ஸ்ரீபகவான் தீர்ப்பு என, ஸ்ரீமஹான்கள்
சொல்லக் கேள்விப்படுகிறோம்!
இது பரமுக்தியாக, அமைவதால், இதன்நிலை இவ்வளவுதான்.

(2) இந்த ஜீவன்முக்தியாகிய, பரமுக்தியானது,
எந்த நாமரூபமும் அற்றது! அது நமக்கு அன்னியம்
இல்லாதது! அது நாம் நாமாகவே, உள்ள நிலையாகும்!
மனதின் கவனக்குறைவால், நமக்கு நாமே,
ஓர் தோற்றம், எடுத்துக் கொண்டோம்.
அத்தோற்றம், புண்ணியபாபம் என, பேசப்படுகிறது.
முன் கூறிய நிலைகளில், அக்கவனக் குறைவை
ஒழித்துவிட்டு, அறிவுசொரூபமாக இருந்துகொண்டு,



"இறை, குரு, பரா" கருணையால்;

பொய்மை உணர்ந்து, இல்லையென தள்ளிய நிலையிலும்; மெய்மை உணர்ந்து, அதுவே ஸத்தியம்; அதுவே நாம் என உணர்ந்த நிலையிலும்; விதேக முக்தி என்ற நிலையில், தூலம் நழுவிப் போகும் நிலையிலும்; (மரணவஸ்தையிலும்)

(A) அவருக்கு, அவஸ்தை இல்லை என்பது ஸத்தியம்!

(B) மனதை, உடையவர்கள் காணும் நிலையில், "மனோ"மயபாவனையில், அவஸ்தை உண்டு என்பதும், அவர்கள் நிலையில், ஸத்தியமே!

(C) பயிற்சியில், பக்குவப்பட்ட, பக்குவ ஆன்மாக்களுக்கு, மனம் மறுக்கான தன்மையால், அவஸ்தை தோற்றாமல், ஆனந்தம் ஒன்றே அங்கு தோற்றுவதும் ஸத்தியமே!

முதலாமவர், தூலத்தை விடுபவர்.
இரண்டாமவர், மனம் பக்குவப் படாதவர் (அஞ்ஞானி)
மூன்றாமவர், சாட்சிபாவனையில், உள்ளவர். (ஞானநிலைபெறுபவர்)




உ

# "பர உணர்வு"!

(1) பர தத்துவ வடிவமாக, திரண்டு உருண்டு வந்து, அத்வைதத்தை உணர்த்தும், நிமித்தமாக வந்தது :— காலம், தேசம், வர்த்தமானம், நாம, ரூப, குணம், குறி, மணம், வாக்கு, காயம்! ஆகிய இந்த, பத்தினையும், தொட்டு உணர்த்தவோ, சுட்டிக்காட்டவோ, முடியாததானது; ஆனால் வாக்கினால், சொல்லும் நிலையில், "பர" சொரூபமான ஒன்று, தானே தமக்கு, ஓர் வடிவம் தாங்கி, வந்தது என, ஸ்ரீ அனுபவ மஹான்கள் சொல்வர். இங்கு "பர.தத்.துவம்"! என சொல்வது, தத்.த்வம்.அஸி! என்பதையே, சற்று இடம் மாற்றிப் போட்டிருக்கிறார்கள். என உணரவும். இங்கு பர என்பது, அஸிபதமாகும்!

திரண்டு, உருண்டு வந்தது என்பது, தம் நிழலாகிய, யோக மாயாவை, தம்மோடு இணைத்து, பிணைத்துக் கொண்டதாலேயே தாம் ஓர் உருவம் தாங்க முடிந்ததென்று ஞானிகள் சொல்வர்.




17

அவ்வுருவமும், பக்தர்களுக்காகவே, வந்ததும்!
அதுவே பக்தர்களுக்காக, ஸ்ரீபகவானாகவும்.
பாமரர்களுக்காக, நாமரூப உலகமாகவும்,
வடிவெடுத்துக் கொண்டது. பக்தன் வேறு,
பாமரன் வேறு அல்ல. இருவரும் ஒருவரே!
விளையாடும் நிலையில், பாமர வடிவுக்கு,
நாமரூப உலகமாகவும். விளையாட்டு போதும்
என நிறைவு, பெற்ற நிலையில், பக்தன் வடிவுக்கு, ஸ்ரீபகவானாகவும், அதுவே ஆகிக் கொண்டது.
விளையாட்டின் நிலையில், ரமிக்கும் போது,
அங்கு மனம் தேவை ஆகிறது.

விளையாட்டை போதும் என, நிறைவு செய்த
நிலையில், ஸ்ரீபகவான் தாமே என, ஆகும் நிலையில்
அறிவு தேவை ஆகிறது!

பக்தனோ, பாமரனோ, உலகமோ, அனைத்து உயிரினமோ
எல்லாம் ஒன்றே! அவ்வொன்றிற்கு, எதுவும்
அன்னியமில்லை, என்பதை உணர்ந்தவே,
அத்வைத ஆனந்தமும், தானே ஆனது!



இங்கு பர தத் த்வம் என, ஏன் போட்டார்கள்
என்றால்? அசிபதமாகிய, பரசொரூபமே!
தற்பதமாகிய, ஸ்ரீபகவானைத வந்து, பின்னாமே,
த்வம் பதமாகிய, ஜீவ சொரூபமாக இருந்து,
விளையாடுகிறதென்று, உணர வேண்டும்!
பிரமாணமாகச் சொல்லுவோம்:- இது
அதுவாகிய, பரமாத்ம! ஜீவாத்ம! விளையாட்டே
தவிர, விளையம் (வினை) இல்லவே இல்லை! ஆனவ்
"வினை" என்றும், அவ்வினையின் "ஜீவன்"
என்றும்; அச்ஜீவ இயக்க "மனம்" என்றும்;
மனமயக்க, "மாயா" என்றும்; அம் மாயாவின்
அதிபதி, "ஈசன்" (ஸ்ரீ பகவான்) (விதி) என்றும்;
அறியாமையின், மாந்தர் புலம்புகின்றனர்
அது இல்லவே இல்லை! அது இல்லவேஇல்லை!
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!!



பரசொரூப விளக்கம்
அனைத்தும் கற்பனையே!

பரசொரூபத்திற்கு, விளக்கமில்லை
யென்பதே சத்தியம்!

உ அறிவே ஆன்மா! ஆன்மாவே அறிவு
காலாதீத பரசொரூபமும், அதன் நிழலாகிய
யோகமாயாவும், இணைந்து பிணைந்ததனால்,
ஆகிய விளக்கமாக, பரமே மண்ணாகவும்!
மண்ணே பரமாகவும், ஓர் தோற்றம் உண்
டாக்கிக் கொண்டதென, உணர்வது அறிவாகும்.
அவ்வறிவே, உணர்ந்த நிலையில், பரமே
பரமாத்மாவாகவும், பரமாத்மாவே ஜீவாத்
மாகவும், ஜீவாத்மாவின், விளையாட்டிடமே
உலகமாகவும், விளையாட்டுப் பொருள்களே,
நாமரூப அனைத்து, தோற்றங்களாகவும்,
அத்தோற்றங்களை, வைத்து விளையாடும் நிமி
த்தமாக, மாயாமனதையும், தானே உண்டா
க்கிய தென, உணர்ந்தால், அங்கு
அசையா நிலையில், சத்தாகவும்!
அசைகின்ற நிலையில், சித்தாகவும்!
அசைகின்ற நிலையில், ஆனந்த உலகாகவும்!



இப்படி ஒன்று நிலைகளிலும், அதுவே தன்னைத்
தானே, ஆக்கிக் கொண்ட தென்பதே. ஸத்தியம்
ஆதலால், அறியாமையின் மாந்தர், உலகம்
உண்டென்றும், ஜீவன் உண்டென்றும்,
இன்பதுன்பம் உண்டென்றும், பிதற்றுகின்றனர்
அப்படி ஒன்றும், இல்லவே இல்லை! இல்லவே இல்லை.
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!

ஒ பயன்கருதா தன்மையால், மனம் தெளிவானது!
பயன் என்றால் எதிர்பார்ப்பு ஆகும். பயன் என்றால்
வியாபாரம் ஆகும்! பயன் என்றால் விளம்பரம் ஆகும்.
பக்தியோ! கர்மாவோ! செய் பயன் கருதினால்,
புண்ணிய பாபம் என்ற வினை நம்மைச் சாரும்!
பக்தியோ! கர்மாவோ! சர்வார்ப்பணமாகச்
செய்தால், புண்ணிய பாப வினை, நம்மைச் சாராது.
புண்ணிய பாப வினை, இல்லாத் தன்மையால்,
நாம் நாமாகவே இருப்போம். நாம் நாமாக
(ஆத்மாவாக) இருந்தால், நாமரூப, ஜகத், ஜீவ,
ஈஸ்வராதிகளின், தோற்றம் வரவும் முடியாது.






அத்தோற்றம் இருக்கவும் முடியாது.
அத்தோற்றம் இயங்கவும் முடியாது. மேலே
சொன்ன தோற்றமும், இருப்பும், இயக்கமும்,
உண்டென்று, அறியாமையின் மாந்தர்,
புலம்புகின்றனர். உண்மையில் இல்லவே இல்லை.
இருப்பது ஒன்றே. நடப்பது நலமே.

(4) எதிரும் புதிருமாக, நாமரூபம் தோற்றுவதால்.
வாக்கு வளர்ந்து, விரயமாகிறது. அங்கு
வாக்கு உலகம், உண்டென நம்ப வைக்கிறது.

எதிரும் புதிருமாக (எதிர் என்றால் தோற்றம்
புதிர் என்றால், சந்தேகத்தால் தோன்றும் கலக்கபயம்)
தோன்றுவதை, ஏதேனும் ஓர் நாமரூபம், கொடுக்
கும்போது, இது யார்? இது எப்படி, ஏன், எதற்கு
வந்தது? இது என்ன செய்யும்? என்ற பல பல,
கேள்விகளை உண்டுபண்ணி, கலங்கத்தையும்,
கலங்கத்தால், கலக்கத்தையும். கலக்கத்தால்,
பயத்தையும். உண்டுபண்ணி, அதை
விகாரப்படுத்தி, அவ் விகாரத்தன்மையினால்,
விவகாரத்தை (பலபல பிரச்சனைகள்)



(௨௨)

உண்டு பண்ணுவது இயல்பே!
அப்படி கண்கள் மூலமாக, மனம் காணும்
அனைத்தையும், நாமரூபமாக கற்பனை பண்ணுமல்,
எல்லாம் "மண்ணே"! என்றும்; இவை
அனைத்தும், நம் வினையின்படி, விதி தேவன்,
(ஸ்ரீபகவான்) செய்யும், ஓர் உபகார நாடகமே!
அவன் நடத்துவது, நன்மையேயன்றி, தீமையல்ல
என்று மெய்யாகவே உணர்ந்து! பண்டப் பரிவர்த்
தனம், (கொடுக்கல் வாங்கல்) ஒழுங்காக செய்யப்படுகிறது
என, உணர்ந்து கொண்டால் அங்கு விகாரமும்,
அதன் விவகாரமும், இல்லாது ஒழியும்.
பேசிப் பேசியே, உலகுக்கு உயிர் கொடுப்பதால்,
நம் வார்த்தை, குறைத்தால் போதும்.
வார்த்தையிலும்; அதன் விகார விவகாரத்திலும்,
தம் அறியாமையால், சிக்கியபாமரர்,
உலகம் உண்டு என்கின்றனர். ஆனால் இவ்
உலகம் இல்லவே இல்லை! பரமாகிய மண்ணே!
மண்ணாகிய பரமே! ஸத்தியம்! ஸத்தியம்!!
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!



உ

(௨௩)

௫ (A) புத்திபூர்வமான, பொருள் இல்லை!

(B) கற்பனையால், எண்ணும் பொருளும் இல்லை!

(C) சிந்தித்து சிந்தித்து, செயலாற்றும் பொருளும் இல்லை!

(D) வாக்கால் விவகரிக்கும், பொருளும் இல்லை!

(E) எனது என, சொந்தம் கொண்டாடும், பொருளும் இல்லை!

(F) மேவேறிய நிலைகளினால், தொடர்கின்ற துவைத பயமும் இல்லை!

ஸத்தியம் ஒன்றே! உண்மை! அதுவே நாம்!

---

(A) நாமரூபமாக காணும், புத்திபூர்வமான, எப்பொருளும் இல்லை! எல்லாம் மண்ணே!

(B) ஒன்றை, பலபலவாக, கற்பனைபண்ணும், எப்பொருளும் இல்லை! எல்லாம் மண்ணே!

(C) எண்ணி எண்ணி, மனதை அழுத்தி புண்படுத்தும், எப்பொருளும் இல்லை! எல்லாம் மண்ணே!

(D) வாக்கால், விகாரம் அடைந்து, விவகரிக்கும் எப்பொருளும் இல்லை! எல்லாம் மண்ணே!


(E) நாமரூப, தோற்றம் உண்டானால், அதை சொந்தம் கொண்டாடுவதும். அதைவந்தப்



உ

படுத்துவதும், அதனால் பற்று உண்டாவதும். அப்பற்றல், புண்ணியபாப வினையும், அவ்வினையால், ஜனனமரணம், உண்டென்று அறியாமையின், மாந்தரால், பேசப் படுகிறது. நாமரூப தோற்றம், உண்டானால் தானே, இத்தனை "பிரச்சனைகளும்" உண்டாகும். எல்லாமே பரமாகிய மண்ணே! ஆகவே இங்கு,

F நமக்கு அன்னியம், எதையும் இல்லாத் தன்மையால், "துவைதயம்"! எதுவுமே இல்லை! ஸத்தே ஸித்தாகி! ஸித்தே சித்தமாகி, விளையாடியதென, சாஸ்திரங்கள் சொல்கின்றன! அதனை ஆனந்தம் உண்டென்றும், பேசப்படுகின்றன. உண்மையால் எதுவும், வரவும் இல்லை. எதுவும் போகவும் இல்லை. சஞ்சலமற்ற (அசைவற்ற) பிரம்மமாகிய மண்ணே! மண்ணாகிய பிரம்மமே இருக்கிறது! இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!






6 காண்பான் இல்லாததனால், காட்சி இல்லை!
காட்சி இல்லாததனால், காண்பவன் இல்லை.
காண்பானும், காட்சியும், இல்லாமையினால்,
நனவு! கனவு! சுழுப்தி! இம்மூன்றும் இல்லை!
இம்மூன்றும், இல்லாமையினால், ஜனனமரணம்
இல்லை! தன்னையன்றி, மற்றொன்று இல்லாமையால், பந்த ஜீவனும் இல்லை! ஜீவன்முக்தியும் இல்லை!

---

காண்பவன் என்பது, இங்கு மனம் என பேசப்படுகிறது.
மனம் இல்லாத் தன்மையினால், நாமரூப காட்சி இல்லவே இல்லை!
அப்படி இருந்தாலும், ஒருபிரயோஜனமும் இல்லை.
நானும் மனமும் காட்சியின் உலகமும்!
இல்லையென்றாகும் போது, விழிப்பு ஏது?
கனவு ஏது? ஆழ்ந்த உறக்கம் ஏது? இம்மூன்றும் இல்லையென்றாகும் போது, மருட்சியும் மிரட்சியும், சிக்கும் ஜீவன் ஏது? ஆகவே, ஜனன மரணமும் இல்லை. அதன் நிவர்த்தியான ஜீவன்முக்தியும் இல்லை! இவை அனைத்தும், உண்டென்று அறியாமையின், மாந்தர் பிதற்றுகின்றனர். ஆனால் இருப்பது ஒன்றே! நடப்பது நவமே!






7. ஸ்ரீபகவான் கருணை, பெருந்தன்மையினால்,
கள்ளமனம் தோன்றியது.

நல்லமனம் :- பொறுமை, அன்பு, கருணை,
பணிவு, கனிவு, சாந்தி, அமைதி,
ஆனந்தம், நம்பிக்கை, வைராக்கியம்,
ஆகிய இந்த பத்தும் நல்ல மனத்தின் பிறப்பிடமும்,
இருப்பிடமும், இயக்க நிலையும், ஆகும். அதுவே,
"சாட்சி" பாவனையின், ஸ்ரீபகவத் நிலையாகும்.


கள்ளமனம் :- போட்டி, பொறாமை,
விரோத குரோதம், கோபாவேசம், மோகாவேக
காமம், பட்டம் பதவி (பண) மோகம், லோபம்,
சந்தேகம், இனமத வெறி, குற்றம் குறையாகவே
காண்பதும், கேட்பதும், பேசுவதும், இதனால்
சஞ்சலம் அடைவது, ஆகிய இந்த பத்தும்,
கள்ளமனத்தின், பிறப்பிடமும், இருப்பிடமும்,
இயக்க நிலையும் ஆகும்.
இவை இரண்டுமே "மனதின்" சேகரிப்பாகும்.
இவை பூர்வகர்மாவினாலும், தற்காலிக பழக்க
வழக்கத்தினாலும், இயல்பாகவே தோன்றிவிடும்.



(27)

இங்கு நல்லமனம், நமக்கு தேவை என்றால்,
எல்லாம் ஸ்ரீபகவான் பொருள்! எல்லாம்
ஸ்ரீபகவான் செயல்! நம்தாவும் ஒர் பதுமையே!
என்ற "சர்வார்ப்பணம்" ஒன்றில்தான்
நல்லமனம் பெற முடியும்! வேறு எந்த சாதனை
யாலும், நல்ல மனம் பெறமுடியாது என்பதே,
ஸ்ரீ அனுபவ மஹான்களின், வாக்காக இருக்கிறது.
இந்த சர்வார்ப்பணத்தினால், நல்லமனம்,
ஸ்ரீபகவான் கருணையால், பெற்றால் தான்,
விநசாம்பவி ஆகும்! விநசாம்பவி ஆனால்,
விதேகமுக்தி, இயல்பாக பெற முடியும்.
ஸ்ரீஸத்குரு திருவையினால், பிரம்மார்ப்பணம்,
பெற்றால்தான், அந்த நல்லமனமானதும், அழிந்து,
அதாவது, அறிவு பேரறிவாக மாறி (மனம் மாறக்கா) கி
அகண்டான்ம பாவனையை, பெற முடியும்.
ஆனால் அறியாமையின் மாந்தர், கர்மமனம் வசம்
சிக்குண்டு, இவ்வாறு உலகை, திருப்புடையதாக,
கருவினையன்றி, மனதால் குடும் அவதியுறுகின்றனர்.
எல்லாம் பரமாகிய, மண்ணே என்றும், மண்ணாகிய
பரத்திற்கு, எதுவும் அன்னியமில்லை, எனத் தெளிந்து
இருப்பது ஒன்றே, நடப்பது நலமே, உணர வேண்டும்.

—×—×—×—×—×—×—×—×—





## 8 ஸத்தில் தோன்றியதே சித்தம்!

எல்லாம் ஸித்தாக உணர்ந்தால், சித்தம் இல்லை!
எல்லாம் சித்தமாக கண்டால், ஸித் மறைந்துவிடும்!

---

ஸத்தில் இருந்தே, ஸித் தோன்றியது.
அசையா நிலையில், ஸத்தாகவும்! அசையும் நிலையில், ஸித்தாகவும், அந்த ஒன்றே இருக்கிறது.
அசையும் ஸித்தே, அசைக்கும் சித்தமென ஆனது!
இதற்கு உதாரணம், தருவது என்றால்?


| ஸத் | ஸித் | சித்தம்! |
|---|---|---|
| மண் அசையாதது! | பொன் அசையும் நிலை! | ஆபரணம் அசைக்கும் நிலை! |
| பஞ்சு அசையாதது! | நூல் அசையும் நிலை! | வஸ்திரம் அசைக்கும் நிலை! |

இதேபோல் உலக நிலையில்?

மண் அசையாதது! ஜலம் சேர்ந்த களிமண் அசையும் நிலை! பாண்டம் அசைக்கும் நிலை!

இப்படி இன்னமும், நிறைய விளக்கம் கொடுக்கலாம்.
மரமாக கண்டால், யானை இல்லை! யானையாக கண்டால் மரம் இல்லை!
கல்லாக கண்டால், நாய் இல்லை! நாயாக கண்டால், கல் இல்லை!
பொன்னாக கண்டால், ஆபரணம் இல்லை! ஆபரணமாக கண்டால், பொன் இல்லை. இதுவும் இன்னமும், அனேகம் சொல்லலாம்.








ஸத் என்றால் செயலற்ற நிலை! ஸித் என்றால், செயலின் ஆக்க நிலை! சித்தம் என்றால் செயல்படும் நிலை இதற்கு மண்! வான்! ஆவரணம்! என்னும் இம் மூன்றையும், சொல்லலாம்!

ஸத் என்றால் **நாமம்** ஒன்றே உண்டு!

ஸித் என்றால் **ரூபம்** என ஒன்றுண்டு!


சித்தம் என்றால், நாமரூபம், இரண்டும் அசையும் ஒன்று!

மனம் என்றால், நாமரூபம் இரண்டையும், அசைத்து செயல்படுத்தும், (குணாதிசயம்) கொடுக்கும் ஒன்று! இப்படி மூன்று நிலைகளிலும், அந்த காலாதீத ஒன்றே, செயல்படுத்திக் கொண்டு, தாம் செயல் படாதது போல், சும்மாவே சுகமாக இருக்கிறது! மனம் அடைந்தவர்களுக்கு, செயல்படுவதாகவும், செயல்படுத்துவதாகவும், கற்பனையில் தோற்றும். மனம் மறந்தானவர்களுக்கு, செயலும் செய்விப்பதும் இல்லவே இல்லை! அங்கு மண்ணாகிய பரமே! பரமாகிய ஒன்றே, எக்காலமும் உண்டு. என்பதே சத்தியம்! ஆகவே இருப்பது ஒன்றே! நடப்பது நவமே!



9. இருகுணமும் இழந்து, ஒரு குணமானால்,
ஸ்ரீ பகவானைக் காணலாம்!
அவ் ஒரு குணமும் இழந்து, குணாதீதமானால்,
நாம் நாம் ஆகலாம்! (நாம் அது ஆகலாம்)

முக்குணங்களால், வினைகள் சேர்கின்றன!
வினைகளால், புண்ணிய பாபம், சேர்கிறது!
புண்ணிய பாபங்களால், ஜனன மரணம் உண்டாகிறது!
இம்முக்குணங்களில், ஒன்று ஸத்வ குணமாகும்!
மற்றும் ரஜஸ், தமஸ், என்ற இருகுணங்களால்
மனித குலத்தில், தாழ்வான (ஈனமான)
ஜனனமும், மற்றும் உயிரினங்களாகவும், ஜனனம்
உண்டாகும். ஸத்வ குணம், ஒன்றில் மட்டுமே,
வசதியான ஜன்மாவும், பதமுக்திக்குரிய,
ஜன்மாவும் பெறலாம்.
இந்த ஸத்வ குணம், ஒன்றுவேயே, ஸ்ரீ பகவானைத்
தரிசிக்கும் நிலையும் பெறலாம். ஸ்ரீ பகவானைக்
காணும். நிலை, பெற வேண்டுமானால், ஓர் அன்பர்
வாக்குப்படி :- எங்கும் உள்ள கடவுளை, உன்
இதயக் குகையில் காணலாம். இங்கு கண்ட
பிறகுதான், இருப்பதெல்லாம் அவன்மயம்!



(31)

என்ற அனுபவ நிலை பெறவாம். ஈ எறும்பு முதல், அனைத்து ஜீவர்களுள்ளும், அந்த ஸ்ரீபரமன் நிறைந்திருக்கிறான். என்ற பேருணர்வு பெற வேண்டும். இதற்கு ஒரே வழி:-

"**நாம் நம்முள் அடங்க** வேண்டும்."

எவரையும்! எந்நிலையிலும்! எக்காலத்தும்! எக்காரணம் கொண்டும்! "**அடக்க**" வேண்டாம்.

இதனால் எல்லாம், உன்னுள் அடங்கும்! அங்கே ஸ்ரீபரமனும், உன்னுள் அடங்குவான்! அங்கு எந்த எண்ண வடிவம், ஸ்ரீபகவானுக்கு, நீ கொடுக்கிறாயோ, அவ்வடிவில், ஸ்ரீபகவான் தோன்றியே ஆகவேண்டும்! அப்படி இல்லையேல், கடவுள் இல்லையென்றாகிவிடும்! உன்னுள் உணர்ந்த பின், அவனே நாம்! நாமே அவன்! என்ற நிலை பெறவாம். அந்நிலையை, ஸத்குருகிருபையால் பெற்றபின், எல்லாம் மண்ணாகிய, பரம் என்றும், பரமாகிய, மண்ணை என்றும், பூர்ண நிலை பெறவாம். அங்கு இருப்பது ஒன்றே! நடப்பது நவமே!! எனவாகும்.

—x—x—x—x—x—x—x—x—



உ

(௩௨)


(10) எங்குமாய், நிறைந்த பூரணப் பிரம்மம் அல்லால் ஓர் அணுவும், எங்கும் எதிலும் இல்லை! யென்ற "அகண்ட" பரபாவனை, செய்வதல்லால், மனதை அழிக்க முடியாது!

---

ஊசி நாட்ட, இடம் இல்லாமல் அந்த ஒன்றே எங்குமாய்! ஏகமாய்! எதிலுமாய்! நிறைந்து, அதுவே நாமாய்! நாமே அதுவாய்! நிறைந்து, இருக்கிறோம் என்ற, பர பாவனை செய் என்கிறார்.

இதன் காரணம்?

மாயாவின் சாதனை, அண்ட, ரண்ட, பிண்ட, பிரம்மாண்ட, சராசரங்களை உண்டுபண்ணியதோடு சரி! மாயாமனதின், வேதனை அப்படி தோன்றிய தோற்றத்தில், தேவையையும் ஆசையையும் மாற்றி, மாற்றி, பிணைத்து இணைத்து "நாமரூபங்கள்" உற்பத்தி, பண்ணிக் கொண்டு, எதிர்பார்ப்பே, ஏமாற்றமாய்! ஏமாற்றமே தடுமாற்றமாய்!





அத்தடுமாற்றத்தால், பற்பல, கோர குணங்களுக்கு ஆளாகி, அதுவே வினைத் தொடர்பாய், அதுவே ஜனனமரணங்களாய், பின்னிக் கொண்டு இன்பத்தையும், துன்பத்தையும், மாறிமாறி, கொடுக்கிறதென்று, பாமர மக்கள், அரற்றுகின்றனர். அதுஇல்லவே இல்லை.


வஸிஷ்டர் வாக்கு:

ஜனனமும் இல்லை! மரணமும் இல்லை!
இன்பமும் இல்லை! துன்பமும் இல்லை!

இன்பதுன்பமென்னும், சுழலில் சுழல்பவர்களும், இல்லவேஇல்லை! இல்லவே இல்லை! இல்லவே இல்லை!

"ஒன்றன்று" எப்போதும் இருக்கின்ற வஸ்துவே, இருக்கிறது. ஆகவே, போவதையும், வருவதையும், பற்றி சிந்திக்காதே, கவனிக்காதே, பார்ப்பதையும், கேட்பதையும், அதுபற்றி பேசுவதையும், "குறைத்து, குறைத்து நிறுத்து" இருப்பது ஒன்றே, நடப்பது நலமே என உறுதி செய்!

—x—x—x—x—x—x—






## (11) வாய் ஞானம் வேண்டாம்! அனுபவ ஞானம் வேண்டும்!

(1) நான், என்றல், எனதை, விடவேண்டும்!
குற்றம் குறை இனி காண வேண்டாம்!
பேச்சை குறைக்க வேண்டும்!
சொந்த பந்த, உறவு சுற்றமாக, இனி காண வேண்டாம்
எல்லாவற்றிலும், ஸ்ரீ பகவானை காண வேண்டும்!
,, ஸ்ரீ பகவான் செயலாக உணர வேண்டும்!
எல்லாவற்றையும் ஸ்ரீ பகவான் பொருளாக, உணர வேண்டும்
இப்படியே, சாதனையின் வழி முறைகளை, பேசிப் பேசியே
**“வீண் காலம்”** கடத்துவது வாய் ஞானமாகும்

(2) நான் என்றல் எனதை, முழுமையாக விட்ட
நிலையில், பொறுமை, அன்பு, கருணை, பணிவு,
உள்ள நிலையில், எதையும் அமைதியாக,
ஏற்றுக் கொண்ட நிலையில், எல்லாம் நலமே!
எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என்ற
அனுபவ நிலையில் **“அடங்கி”** இருப்பது
அனுபவ ஞானம் ஆகும்.






மேலே கூறிய அனுபவ நிலையில் தான்

(12) (A) கெடுக்கின்ற சித்தம் இல்லை,
(B) தோற்றத்தால் மயக்கும், ஜகமும் இல்லை,
(C) பிறவி வித்தாகிய, அஹங்கார மமகாரம் இல்லை,
(D) உருசி நாட்ட இடம் இல்லாமல், எங்கும் சர்வ
வியாபகமான, பிரம்மம், ஒன்றே உள்ளது,
என்ற உணர்வோடு, நிஷ்டையில் கொள்வாயாக.

---

(A) வாய் ஞானம் இல்லாமல், அனுபவ ஞானம்
பெறும் போதுதான், சித்தமானது "ஸித்" சொரூபமாக
மாறும். அங்கு சித்தத்தின், அசைவு முழுமையாக,
நின்று விடும். அங்கு நாம ரூபம், அனைத்துமே,
ஜகத்தாக தோன்றாது, அனைத்தும் மரத்தாக தோன்றும்
அனைத்தும் மண்ணாகவே தோன்றும்.

(B) நாம ரூப, ஜகத் இல்லையானால், அவைகளை எனது
என, சொந்தம் கொண்டாடும், ஜீவர்களும்
இருக்க முடியாது. இருக்க இயலாது. அங்கு அனைத்து
ஜீவ வேஷங்களும், அனைத்து தோற்றங்களும்
பரமாகிய பூரணமாகவே மாறிவிடும். மாறியே
ஆகவேண்டும். காரணம்? அங்கு, விகாரம் அடையும்
மனம், புத்தி, சித்தம், ஆகிய இம்மூன்றும்.



இயல்பாகவே மறைந்து, அறிவாகவும் அவ்வறிவே, பேரறிவாகவும் மாறிவிடும்.

(உ) ஆகவே அங்கு, அஹங்காரமும்! அதிகாரமும்! ஆதிக்கமும்! அபிமானமும்! இல்லாது ஒழியும்! அங்கு முக்குணமும் அற்று, நிர்க்குணம் இயல்பாகவே பெறமுடியும்.

(D) நாமரூப ஜகமும், அதை ஆட்டுவிக்கும், கோர குணங்களும், ஒழிந்து நாசமானால், அங்கே எந்த இயக்கமும், இல்லாத் தன்மையால், அகண்டாண்ட நிலையாகிய, அகண்டபாவம், இயல்பாகவே சாத்தியமாகும். இந்நிலை கூடிவிட்டால், உற்றுநோக்கிட இடம் இல்லாமல், எங்குமாய்! ஏகமாய்! எல்லாமாய்! அந்த "ஒன்றே" நிறைந்திருக்கிறது என்ற "பரா" உணர்வு சாத்தியமாகும். இதுவே முடிந்த முடிவாகும்! அந்நிலையில் தான், "ஹரிஜயன்" எனச் சொல்லும் தூங்காமல் தூங்கும் நிலை, சாத்தியமாகும். இவ்வனுபவமே, இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! எனஆகிவிடும்!

—×—×—×—×—×—×—×—




உ



(13) எல்லாமே பிரம்மம் என்ற, அகண்டாகார பாவனை செய்து வந்தால், மனோநாசம் ஆகும்! அங்கு சொல்லமுடியாத, விளக்கமுடியாத, ஓர் பரவசநிலை உண்டாகும்! அதுவே "பர" நிலையும் ஆகும். அதுவே சும்மா இருக்கும் நிலையுமாகும்!

---

எல்லாமே பிரம்மம், என்ற நிலை, எப்படி ஏற்படும் என்றால்:— நாமரூப, குணதோஷ, சொரூபங்களை இல்லையெனத், தள்ளிறுவன்று, தூலபாவனை, தொலையவும் செய்யாது. சாட்சிபாவனை கூட்டவும் செய்யாது. இத்தூல, துவைத பாவனையானது, ஓர் தொற்று நோய் போன்றதாகும். நாமரூப உலகை, எனது என்றால், இத்தொற்று நோய், வேகமாக பரவும். நாமரூப, உலகை உனது, என்றால் அந்நோய்க் கிருமி, பரிபகவானை, தாவிப் பிடிக்கும். அவரே "நந்த (குரு)" சம்பந்தம், இல்லாது வளரும். அவன் சூட்சும, சொரூபியாகும்.





அவன் உன் எண்ண வடிவமானவன். உன்
எண்ணமே, அவன் வடிவமாக இருப்
பதால், எண்ண வடிவமான, ஸ்ரீபகவானிடம்,
எல்லாம் உனதே என்ற, எண்ண வடிவம்
அவஸ்யம், போய்ச் சேர்ந்தே ஆக
வேண்டும். அதுவே விதி! அதுவே நியதி!
சூட்சும எண்ணத்தால், தோன்றியவனை!
சூட்சும கற்பனையின், சமர்ப்பணை ஒன்றும் செய்ய
முடியாது! ஒன்றும் செய்ய இயலாது! காரணம்
அந்த ஒன்றே, சூட்சுமமோ! இயக்கமோ! அற்றது.
ஆனால் உன் கற்பனை, சொரூப ஸ்ரீபகவானே, சூட்சுமமும்
இயக்கமும் "தம்மாயாலீலை"
உடையவனாகும்.
இங்கு உன் உடலோ, வினைசம்பந்த தாயமாகும்!
இங்கு நீ தொட்டு, அனுபவிக்கும், எந்த
நாமரூப பொருள்களும், பாவ சம்பந்த
இங்கு உன், வினை உடலும். நீ தொடும் மோகும்



(39)

உ


பொருள்களும், "மண்ணே" ஆகும்!

மண்ணைச் சாப்பிட்டேனோ! மண் உண்டு போட்டதடா! என்று எம், ஸ்ரீ பட்டினத்தடிகள் வாக்குப்படி "மண்" மண்ணுகிறது!

சூட்சுமம் சூட்சுமத்தோடு, இணைந்து கலந்து விடுகிறது. ஆகவே இங்கு, உன் சர்வாம் பணம் என்ற, சூட்சும எண்ணமானது, எப்படி முடிகிறது என்றால்?

சூட்சுமத்தோடு, சூட்சுமம் கலந்து கரைந்து மறைகிறது! தூலத்தோடு தூலம் மண்ணோடு மண்ணாகக் கலந்து "மண்" என்ற பரமாகவும் "பரம்" என்ற மண்ணாகவும் ஆகி, ஆகு ஆகி விடுகிறது.

இந்த தோஷ குணங்களால், நான், என்னால், என்னுடையது! எனபாவனை செய்தால், உன் தூலமாகிய, மண்ணில் குருதி (ரத்தம்) என்ற ஜலம் (பசை) இருப்பதால், ஈரவாசிரத்தால்




(40)

தூசி ஒட்டுவதைப் போல், நன்றாக ஒட்டிக் கொள்கிறது. அதுவே “தொற்றுநோய்” கிருமி ஆகும் என, மெஞ்ஞானிகள் சொல்வர். நீ உன்வினை விதிவசத்தால், எத்தனை தூலம் எடுத்தாலும், அவை ஒழிந்து நாசமும் ஆவதில்லை. ஆகவே ஒர் சாதகன்

ஆரம்பத்தில் :- சர்வார்ப்பணம் (எல்லாம் நீயே, எல்லாம் உன்னால், எல்லாம் உன்னுடையதே) செய்தே ஆகவேண்டும். இதனால் தொற்றுநோய், தூலத்தில் பற்று நீங்கப் பெறுவாய்.

முடிவில் :- பிரம்மார்ப்பணம் (எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது நலமே! அது யானே! யானே அது) என “முடிவுறும்” போது, வினையின், அழுத்தம் இல்லாத தன்மையினால், பிரம்மார்ப்பணத்தில், கலந்து கரைந்து விடும். இப்படி பிரம்மார்ப்பண பாவனை, செய்யும் போது, மண் மண்ணாகி விடும். சூட்சும எண்ண மனம், சூட்சுமப் பகவானுடைய மயமாகும். நாம் நாமாக, வேறு இருப்போம். இந்த இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்பது ஸத்தியமானதே!



14

மனதின் தொழிலே தொழிலாகும்!
உடலின் தொழில் தொழிலல்ல!

---

ஸங்கல்பமே உலகம்! ஸங்கல்ப ரஹிதமே மோக்ஷம்! இதுவே ஸத்தியவாக்காகும்! இங்கு ஸங்கல்பம் என்பது, மனதின் காரியமாகும். அங்கு மனதின், வடிவம் ஸங்கல்ப விகல்பம் ஆகும். அதாவது மனதின் வடிவம், ஸங்கல்பத்தால், வரும் "குற்றம் குறையாகும்"!

குற்றம் குறையே மனதின் வடிவமாகவும், மனதின் இருப்பும் இயக்கமுமாக இருப்பதால். மனம் இல்லாமல், நாமரூப, உடல் உலகப்பொருள்கள் இருந்தும் அவை, இல்லாததே! இல்லாததே என்றால், வெறும் "ஜடமே!" ஜடத்திற்கு, ஸ்வாபாவமான இயக்கம் இல்லை, யென்பதே ஸத்தியம்!

ஆகவே மனம் எண்ணுகிறது, உடல் செய்கிறது. அதாவது கயிறு (மனம்) ஆட்டுகிறது. பம்பரம் (உடல்) ஆடுகிறது.

(ஆட்டுபவன் ஸ்ரீபகவான்)




௪௨

உ

வினையை தேடுவது மனம்.
வினையை எண்ணத்தால்
தேடுகிறது. அவ்வினையை
அனுபவிப்பது உடல்.
எண்ணத்தால் வரும்
சோதனையும், வேதனையும், உடலுக்கே!

"வினை" யென்ற உடலின், நிலையறிந்து "மனம்" என்ற கயிற்றை வைத்து "விதி" என்ற, ஸ்ரீ பகவான் ஆட்டுகிறான், என்பதே ஸத்தியமாக இருப்பதால் மனதின் செயலே செயல்! உடலின் செயல் செயலல்ல மேலும் வினை உடலுக்கு, வினையை சேகரிப்பது மனமாகும்! வினையை சேகரிக்கும், இந்த மனமே, அவ்வினையை, உடல் மூலமாகவே, செய்து முடிக்கிறது. அதனால் தான், எம் பட்டினத்தடிகள் சொன்னார்:— வினைப் போகமே, ஓர் சரீரம் கண்டாய். வினைதான் ஒழிந்தால், இமைப் போதளவும், (கண் இமைக்கும் நேரம் மட்டும்) நில்லாது கண்டாய்! என்றார். ஆகவே, "வினை" என்றால் உடல்! இயக்கம் என்றால் "மனம்" என, பொருள்படும்.

இதற்கு ஓர் சிறிய, உதாரணம்:— ஓர் சந்நியாசி "துறவு" வேஷம் அணிந்திருந்தார். ஓர் விலைமாதை, (வேசியை) திருத்துவதற்கு, தம்





கவனத்தை, முழுகவனமாக திருப்பினார்.
அதனால் தற்கவனத்தை இழந்தார்.
அவ்விலைமாதாகிய, தாசியோ நாம் கெட்டுப்
போனோமே! நம்மால் திருந்த முடியவில்லையே!
என்று மனம், உருகி தம் தவறுக்காக வேண்டி,
அழுது அழுது,
தற்கவன சக்தியுடன், இருந்தாள். இவ்விருவரும்,
ஒரேநாளில், தாவத்தை விடுகின்றனர்.


(1) எண்ணத்தால், தாசியை எண்ணி எண்ணி,
அதையே பதிவு ஏடாக்கிய சந்நியாசி,
நரகம் செல்கிறார்.

(2) எண்ணத்தால், உயர்பவனை, எண்ணி எண்ணி,
அந்த நல்ல எண்ணமே, பதிவு ஏடாகிய தாசி,
சொர்க்கம் செல்கிறாள்.

(1) பூலோகத்தில், உடலால் சந்நியாசமும், நேர்
தன்மையினால், அவ்வுடல் பலமரியாதைகளுடன்,
சமாதியை செல்கிறது!

(2) ஊனமாக வாழ்ந்த, தாசியின் உடல், நாய்
நரி, பறவைகளுக்கு, உணவாகிறது.

அங்கு உள்ளத்தால் இழிவான நிலை!
அங்கு உடலால் உயர்வான நிலை!
இங்கு உள்ளத்தால் உயர்வான நிலை.
இங்கு உடலால் இழிவான நிலை.



(மம)

இதிலிருந்து, என்ன உணர்கிறோம் என்றால்?

"ஸ்ரேஷ்டம்" (சிரேயாஸ்) விரும்பிய மனம், மேல் நோக்கி சென்று, பர முக்தியையோ, பர முக்தியையோ அடையும்,

"ப்ரேயஸை" அனுபவித்த உடல், கெட்டு மண்ணோடு மண்ணாகிறது, (அழிநிலை பெறுகிறது).


ஆகவே, உடல் மேல் கவனம் வைக்காமல், மனம், மேல் நோக்கிச் சென்றால், நலம் பெறலாம் ஆகவே

புண்ணியபாவங்களுக்கு { மனமே காரணம் ஆகிறது.
உடல் காரணம் அல்ல.

இங்கு, நாமரூப, உடல் உலக, பொருள்கள் அனைத்தும், பரமாகிய மண்ணே என்றும், மண்ணாகிய பரமே என்றும்; ஞ மனதால் உறுதி செய்து, மேல் நோக்கிச் சென்றால், ஜீவன் முக்தி பெறலாம்.

இந்நிலையில், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என உணர்

(15) நனவின் பொருள், கனவில் இல்லை!
கனவின் பொருள், நனவில் இல்லை!
நனவில் பொருள்களை, நாம் நாடிச் செல்கிறோம்.
கனவில் பொருள்கள், நம்மை நாடி வருகின்றன.



நனவின் பொருள்கள், தூலமாகவும், நம் உடலும் தூலமாகவும் இருப்பதால், நனவின் சம்பவம், வினைத் தொடர்பாகிறது. ஆகவே, வினைசம்பந்த பொருளை, நாம் நாடி தேடி ஓடி, சென்று அடைகிறோம்.


கனவின் பொருள்கள், சூட்சுமமாகவும், நம் மனஉடலும், சூட்சுமமாகவும் இருப்பதால், மனஉடலைத்தேடி, மனஎண்ணம் பொருள்கள், நம்மை, நாடி தேடி ஓடி, வருகின்றன! இதனால் இங்கு கர்மாசம்பந்தம், இல்லாமல் முடிகிறது!

நனவின் பொருளும், அதை அடைந்து, அனுபவிக்கும் நாமும், "தூலமாக" இருப்பதால் கர்மா சம்பந்தம் தொடர்கிறது!

இதன் முக்கியம் என்னவென்றால்?

"ஒன்றுடன் ஒன்று, பிணைந்து இணையும் போது, "மேன்மை" ஒன்று, வந்தே ஆகவேண்டும்.

அதுவே, நாமரூப கற்பனை, சொரூபமான உலகம் ஆகும்! நம் ஆழ்ந்த உறக்கத்தில், நம்முடைய,



ஆத்மாவும், நம் மாயா மனமும்:- இணைந்து
பிணைகிறது. அதுவே கனவில், நாம ரூப,
உலக பொருள்கள் ஆகிறது! அங்கு
பொருள்களும் சூட்சமம்! மனமும், எண்ண வடி
வின் சூட்சமம். ஆகவே அங்கு பசை என்ற,
"பசை" இல்லாத்தன்மையால், கர்மா இல்லை.
நனவில் நாம், தேடிச் செல்லும், உடல் தூலம்
அது குருதி சம்பந்தம், கொண்டதாகும். நம்
அனுபவ பொருள்களும், தூலம் ஆகும். ஆனால்
இங்கு நாமும் உடலும், தொடும் பொருளும்,
தூலமாக இருந்தாலும், அது வெறும் "ஜடமே"!
அறிவற்றதே! ஆனால், இவ்விரண்டையும், சேர்த்து
இணைத்து பிணைப்பது, மாயா மனம் ஆகும்!
மனம் மாயா வாகவும், எண்ண வடிவமாகவும்,
இருப்பதால், இங்கு வினைகளை இணைக்கும்
"பசை" உண்டு என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.
இங்கு இந்த மாயா மனம், இல்லையானால்,





நாமரூப, உலக பொருள்களுக்கோ
தூல உடலுக்கோ இருப்பும், இயக்கமும்
இருக்க முடியாது, இருக்க இயலாது. ஆகவே,
தான், இங்கு எண்ண வடிவில், எல்லாமே
இயங்குவதால், புண்ணிய பாவ நிலையில்,
ஜனனமரணம், தொடர்கிறது என உரையும்.
இம்மாயா மனமானது, சர்வார்ப்பணத்திலும்
பிரம்மார்ப்பணத்திலும், தன்னை "அழிந்து"
விட்டால்; அதாவது மனம் அழிந்து, மனம்
மறைந்தாகி விட்டால், நாமரூப, ஜகப் பொரு
ளும், உடலும், மண்ணாகிய பரமும், பரமாகிய
மண்ணும் என, இயல்பாகவே ஆகிவிடும்.
அங்கு இருப்பது ஒன்றே, நடப்பது நவமே.
என்பதும் சத்தியமாகும்.

---

(16) மனோஜயம் பெற வேண்டுமானால், மனோ
"வியாபாரத்தை" விட்டே ஆகவேண்டும்.
மனோ வியாபாரத்தை, விட்டமறு சூனியம்
மனோ இருள் விலகும்! அகண்ட ஜோதி தோன்றும்!



# இ

(48)


மனஜெயம் பெற, வியாபாரம் விட வேண்டும் என்றால், சொந்த, பந்த பாச, உறவுகளையும் நட்பையும் "நீங்கள்" குறைக்கவாம்! விலக்கவாம்! நறுத்தவாகாது. இங்கு கூடா நட்பு கூடாது! என்பதே முக்கியமாகிறது. உன் அமைதியின், சாதனைக்கு, ஒத்து வந்தால், அங்கு ஸ்ரீயக வண்ணாமா வுடன், இனியவாம்! இல்லையானால் " " வுடன், மௌனம் கலக நான்கி! என்பது போல், பேச்சை குறைத்துக், கொண்டு சுற்று விலகுவாம். காரணம், இதை ஏன் இப்படி சொல்கிறேம் என்றால்

"படிக்க & வழக்க | நோய்"

(பேச்சினையும்) (செய்கையாலும்) (குணங்களின் பிணைகின்றன)


குணங்காரால்

இங்கு, ரத்த சம்பந்தத்தால், இத்தன்மை பிணைகிறது. இங்கு பொருளாலும், (உயிர் கொல்லி என்றபலைக் தாலும்) உணவாலும் (ஆகார தோஷத்தாலும்) இது இணைந்து பிணைந்து, இப்பிணைப்பால், தோஷ வாக்கு பிறக்கிறது.





வாக்கே வாழ்க்கை யாக, இருப்பதால் இதனை,
சான்றோர் மூலம் சதுக்க, என, ஆகி விடுகிறது.
இங்கு ஸ்ரீ பகவன், நாம உணர்வோடு, விலகும்
போது, தேவையில்லாத, உறவு துண்டிக்கப்படும்,
அவன் கிருபையால், தேவையான உறவு, சேர்க்கப்படும்.
இதையே, எம் ரிஷி மகாத்மா, "அதிசய பந்து"
என்றார். இதனை வாழ்க்கையில், வழியால் வரும்
சோதனையையும், வேதனையையும், உன் பொறுமை
என்னும், சாதனையால் வெல்லலாம்!
வெல்லலாம் என்றால், கருமையின் கொடுமை குறையும்.
இங்கு உன் சர்வார்ப்பணம், கை கொடுக்கும்!
இங்கு வியாபாரம் என்ற "பற்றுவரவு"
வந்த கணக்கு மட்டும் முடியும். வேறு எந்த சொந்த
கணக்கும், உன்னைத் தொடாது! தொடரவும் செய்யாது.
இங்கு உன் பிரம்மார்ப்பணம், இயல்பாகவே,
அமைவதால், வியாபாரம், ஒழிந்து மறு க்ஷணம்,
மனஇருள் அகலும்! ஸ்வயம் ஜோதி பிரகாசிக்கும்!
அங்கு இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! ஸாக்ஷியே



60

(17) மனம் அசைந்தால், ஜகஜீவர்கள் தோற்றும்.
மனம் அசைவற்றிருந்தால், பரமே தோற்றும்.

---

மனஅசைவு என்பது, எண்ணத்தால், விரிவடைவது. அதாவது, தோற்றம் என ஒன்று, உண்டானால் அதை, நான்! என்னால்! எனது! என்ற நிலையால், அஹங்கார மமகாரத்தால், விரிவடைந்து, பின்னிப்பிணைந்து, விளையாடி அதை, நாமரூப, ஜக ஜீவ வடிவில், தோற்றச் செய்து, ஜனனமரணம் உண்டுபண்ணும்! மனம், அசைவற்றிருக்க வேண்டுமானால், எதைக் கண்டாலும், எதை கொடுத்தாலும், எதை வாங்கினாலும், அனைத்தையும் **மனதாலே** என ஓர் நிலைப்படுத்தி விட்டால் அவசியம், "**மூச்சு**" அடங்கி, அடங்கி, அடங்கி, அழிந்து விடும்! மூச்சற்ற இடம் எம் இறைதண்டாமே! என்ற நிலை ஸத்தியமாகவும், ஸாஸ்வதமாகவும் இயல்பாகவும் மாறிவிடும்! மாறியே ஆக வேண்டும். அந்நிலையில் பரமே நாம்! நாமே பரம்! இது ஸத்தியம்! அங்கு இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! இது ஸத்தியம்.

—x—x—x—x—x—x—x—




(18)

சர்வார்ப்பணம் / பிரம்மார்ப்பணம் செய்ய "வருத்தம்" இல்லை

தளர்ந்த மனம், வழுவும் மனம், அசையும் மனம், சஞ்சலம் அடையும், மனதுடையவர்க்கு, வருத்தம், கஷ்டம், பாரம், கடும் சிரமம், தோற்றத்தான் செய்யும்.

இதன் காரணம் :- உடல் உலக, ஜகஜீவர்களையும், அனைத்து நாம ரூப, பொருள்களையும், உயிர் கொல்லியாகிய, பணத்தையும், "உடைமை" "உரிமை" யும், பாராட்டுவதனால், மேலே சொன்ன, மனோ சிரமம், தோற்றத்தான் செய்யும். அவை அனைத்துமே, பற்று வரவு, என்ற நியதியில், கொடுக்கல் வாங்கல், செய்ய வந்ததே என்றும். அவைகளுடைய, போக்கு வரவுகளில், மயக்கம் கலக்கம் சந்தேகம், பயம் இல்லாமல். அது ஸ்ரீ பகவானுடைய, மாயா காரியம். அவரவர் வினையின்படி, ஒவ்வொருவரும், கொடுத்ததை வாங்க வேண்டும் என்றும், வாங்கியதை கொடுக்க வேண்டும் என்றும். அமைதி பெற்று "அடங்கி" நடந்தால், இந்த மனோ சிரமம் தோன்றாது.



அங்கு எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனக்கே! என்று மனதளவில் விட்ட நிலையில், இருப்பதையும் கிடைப்பதையும் நடப்பதையும் எல்லாம் நலமே என ஏற்றால், துன்பம் அணு அளவும், இல்லவே இல்லை.

இங்கு மனம், அகந்தை இல்லாமல், மனம் புண்படாமல், லேசாக இருக்கும் பக்ஷத்தில், அங்கு உன் மனம் பிரம்மார்ப்பணம் செய்ய, லேசு லேசு லேசு, சுலபமாகும்! சுகமும் ஆகும்! இது இந்த, நிலையின் அனுபவமாகும்! எல்லாம் ஒன்றே! அதுசிவமே! அதுயாமே! யாமே அது! என்று பிரம்மானந்தமாக, இருக்கலாம்! இந்த பிரம்மார்ப்பண நிலையால், இந்த ஜகத்தை, நோக்கும்போது! "நாமரூப" ஜக ஜீவ, சொரூபம் தோற்றது! எல்லாம் மண்ணாகிய பரமாகவும்! பரமாகிய மண்ணாகவும், அவஸ்யம் மாறும். பின் அந்த, உணர்வு காட்சியும் மறையும்! அங்கு நாம் நாமாகவே, இருப்போம். நமக்கு அன்னியம், எதுவும் இல்லாத, தன்மையால், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்ற நிலை பெற முடியும்!



உ

19 "பரம்பிரம்மம் பரம்பிரம்மம்"

"பரமே" எல்லாம்! எல்லாம் "பரமே"! என்று, அகண்டாண்ட பாவனை, செய்ய! செய்ய! செய்ய! இப்பரபாவனையின், "ஒலி"யானது "ஒளி"யை உண்டாக்கும் என்கிறார், எம்பிரு மஹாத்மா!

காலாதீத அந்த ஒன்றே "அகண்டாகார பேரொளி" ஆகும். அந்த வாக்கே, ஜக ஜீவ, ஈஸ்வராதிகளாகவும், வாக்கே, வாழ்க்கையாகவும் வாக்கே, இந்த இவ்வாத ஜகத்திற்கு, இருப்புத் தன்மையையும் இயக்கத் தன்மையையும், கொடுப்பதாயும், ஸத்குரு வாக்கே, ஓர் ஸத் சீடனுக்கு, அஞ்ஞான இருளைப் போக்கி, "ஞான" ஒளியை ஏற்றி வைப்பதுவும். அதே வாக்கை, மேலே சொன்ன பரபாவனையாக, பாவனை, செய்யச் செய்ய, இந்த "தாமரை"! இயல்பாகவே, அனுபவம் கூட்டி வைக்கும்.



உ

(54)

மண்பாண்டம் என்றும், பொன் ஆபரணம் என்றும், எவரும் சொல்வதில்லை. பாண்டம் என்றும், ஆபரணம் என்றுதான், சொல்லப்படுகிறது.

காரணம் என்னவென்றால்? இருப்பது ஒன்றே என்பது, ஸத்தியமாக பிரகாசிப்பதால், அந்த ஒன்றிலேயே, அனைத்தும் தோன்றின!

மண்ணில் பாண்டம் தோன்றுவது போலவும்! பொன்னில் ஆபரணம் தோன்றியது போலவும்!

அனைத்திலும், அவ்வொன்றே, வியாபகமாக இருந்தாலும், "அவ்வொன்று" எவராலும், விளம்பப்படுவதும் இல்லை! விளக்கப்படுவதும் இல்லை! "அது" தோற்றத்தை, சொல்வாரும் இல்லை! கொள்வாரும் இல்லை! தள்ளுவாரும் இல்லையென, சொல்வதை விட, தன்னை முடியாது, என்பதே ஸத்தியம்!

காரணம்: அங்கு நாமரூபம், விளம்பப்படுகிறது! விளக்கப்படுகிறது! விஸ்தரிக்கப்படுகிறது! ஆகவே கொள்ளும் நிலையிலும், தள்ளும் நிலையிலும்! விவகாரிக்கப்படுகிறது! (பிரச்சனைகள் ஆகின்றன)



உ

இங்கு நீ அதை, கொண்டாலும், தள்ளினாலும்,
அது ஏன் என்றும், எதற்கு என்றும், எப்படி என்றும்,
கேட்கப் போவதும் இல்லை. காரணம் அங்கு மனம்
இல்லாததே காரணம் ஆகும்! முன் சொன்ன நிலையில்,
பரபாவனையில், வாக்கு அடங்கிவிடும்.

"தோஷ, குண, மனம்"!


அழிந்து இறந்தாலன்றி, அனுபவம் கிட்டாது, என்பது
ஸத்தியம் என்று, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.
அந்த தோஷ, குண மனம், இருக்கும் வரை,
திரும்ப திரும்ப, மண் பொம்மை, எடுக்கச் செய்யும்

(A) பரபாவனையால், தோஷ குணமனம், நசிக்கும்!
தோஷ குணமனம் நசித்தால், பரம் பிரகாசிக்கும்!

(B) தோஷ குண மனமானது, நாமரூபத்தில் விரிவடையும்!
நாமரூபம் மண் ஆனால், தோஷ குண மனம் நசிக்கும்!

(C) நாமரூபத்தை, நான் என்பதால், விரிவடைய செய்வது
மனமாகும். நான் என்பதை, விட்டாலும், நாமரூபம்
நாசமாகி, மண்ணாகி விடும்!

(D) நான் என்பதால், ஜனனமரணம் உண்டாகிறது!
நான் என்பதை விட்டால், ஜீவன் முக்தியின் வழி
பிறக்கும்!



இவை அனைத்திலும், உணர்ந்து நோக்கும் போது:—


"நாமரூபமே" மயக்கமாகவும்;

"நான், எனதே" கலக்கமாகவும்;

இவ்விரண்டுமே, ஐணைமந்ணமாகவும், விளங்குவதால்; நான், எனதை; சர்வார்ப்பணத்திலும்; நாமரூபத்தை, பிரம்மார்ப்பணமாகிய, எல்லாம் பரமாகிய, மண்ணே என்றும்; மண்ணாகிய பரமே என்றும்; ஸத்தியமாக, உணர்ந்து விட்டாலே, இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்பது ஸாத்தியமாகும்.

"(20) ஹயன்! ஹரி! ஹரன்!"

ஆகிய இம்மூவரும், நாமரூப, தொழில் கர்த்தாவாக, இல்லவே இல்லையென்றும்; அம்மூவரும், "பர சொரூப அம்ஸ, "ஸத்குரு"வாகவே, இருக்கிறார்கள், என்பதே ஸத்தியம்!




காலாதீத, அந்த ஒன்றே, சதா சிவமாகவும்,
மகேசனாகவும், விளையாடும் நிமித்தமாக,
தோற்றத்தை, ஏற்படுத்திக் கொண்டது, என்பதே
ஸத்தியம்.
அவ்வொன்றே, இரண்டாகி, தம் நிழலின், உதவி
யால் (யோக மாயாவால்) அண்ட, ரண்ட,
பிரம்மாண்டங்களை உண்டாக்கியது.
அவ்விரண்டிலிருந்து, தோன்றிய மூன்றும்,
(ஹயன் ஹரி ஹரன்) தம் நிழலின், உதவியால் (யோகமாயாவால்)
மண், மலை, ஜலம், தாவர ஜங்கமங்களை, உண்டு பண்ணி
"மாயா" வசம் ஜகத்தையும், ஜீவ கோடிகளையும்,
ஒப்படைத்து விட்டு தாம் மூவரும் சும்மாவே, அகமாத
இருக்கிறார்கள்.
அம்மாயாவானது, தம் மகனை, மனதிடம் எல்லா
நாமரூபங்களையும், ஒப்படைக்க, அம்மனமானது,
எண்ண அடிவால், கற்பனைகளை தோன்றச் செய்து,
அதை புண்ணிய பாபம் என, ஒர் பின்னவிட்டு.
அம்மனமே, விளையாடிக் கொண்டிருக்கிறது.
இவ்விளையாட்டானது, "மாயாவுலகம்"



உ

"மனதிற்குமேயல்லாது"
"நமக்கு" (ஆன்மாவாகிய நமக்கு)
இல்லவே இல்லை, யென்பதே ஸத்தியம்!
ஆகவே இங்கு?
ஹயன், ஹரி, ஹரன், ஆகிய இம்மூவரும்,
நாம ரூப, தொழில் கர்த்தாக்களாக இல்லை,
என்பதே ஸத்தியம்!
அம்மூவரும், பரசொரூப, அம்சமாக இருப்பதால்
"ஜீவஅழிப்பு" (ஜீவமுக்தனக்கும் நிலையில்)
"ஸத்குரு"வாக, இருக்கிறார்கள் என்பதே ஸத்தியம்!
இதை எப்படி இத்தனை, உறுதியாக சொல்கிறேன், என்றால்?
முதலில் எல்லாம், மண்ணே என்பதை, உறுதி செய்!
(அம்மண்ணே பரம்! பரமே அம்மண்) இதனுடன்
மாயா இணைந்து, பிணைந்ததனால், நாமரூப, ஜக
தேவந்தரமும், ஜீவ சொரூபங்களும் உண்டாயின.
இங்கு மாயா ஹின்மைகள், மனம் சேர்ந்த தன்மையால்
புண்ணியபாபம், என்னும் ஒரு நிலையால்,



"கண்ணாமூச்சி" விளையாட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்பதே எனக்கு யம்?

இது "மாயா உமணியின்"!

விளையாட்டேயன்றி, நமது (ஆன்மாவின்) விளையாட்டு இல்லவே இல்லை. ஆகவே அம்மூவரும் நம் வழிகாட்டிகளாகிய, ஸத் குருவேயன்றி, தொழில் கர்த்தா, இல்லவே இல்லை! ஆத்மாவாகிய, நமக்கு இந்த மாயாவின், நாமரூப மயக்கமும் வேண்டாம். நமக்கு இந்த மனங்களின், விளையாட்டும் வினையமும், வேண்டாம். அம்மாயாவும், அம் மனமும், எம்முள் தோன்றியதே! ஆகவே, அந்த நாமரூபம், அனைத்தும் "ஏம்" மணி அம்பா பரமேன்றும், "ஏம்பா" அம்பா, மணியே என்றும் உணர்ந்தவன், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!

—×—×—×—×—×—×—×—

(21) 3ஆவது பாடலை, சற்று கூர்ந்து, கவனிக்கவும்! பாடலையும், விளக்கத்தையும், இணைத்தே கருதுவோம். கருத்து ஒருமித்து, உணர்ந்து அது ஆகவும்!



(60)

அகண்டாகார விருத்தி அடைந்தவனே,
"கிடஞானி" எனக்கூறி விட்டு, இந்த
37வது பாடலில், அந்த கிடஞானியின், உறுதி நிச்சயம்
அந்த சமாதி விட்டு, அதாவது அகண்டாகார
விருத்தியை விட்டு "பிரிந்த" காலத்தில்,
அதாவது "சாட்சி" விருத்தியில் இருக்கும் போது,
முழுமையாக, சாட்சி விருத்தியில், மூழ்கி விடாதே!
என்றும், அகண்ட பாவனையை, ஓர் கரத்தால்,
பற்றிக் கொண்டும் (அதுவே நாம்! நாமே அது! என்ற
உணர்வுடன், இருந்து கொண்டு) மறு கரத்தால்,
"எல்லாம் நீயே" என்ற, சர்வார்ப்பணத்தால்
சாட்சிபாவனையின், காரிய நீக்கம் செய்யவாம்.
இங்கு இருப்பும், அதிகம் வைக்காதே, எனக்கூறி
விட்டு, எந்த வினையும், அகண்ட பாவனையின்
அம்சமாக இருப்பவனுக்கு, சமாதி & நிஷ்டை
என்ற மோக்ஷ சாதனை, தேவை இல்லை என்கிறார்.
நிஷ்டை:- உள் ஆழ்தல்!
சமாதி:- உள் ஆழ்ந்து மூழ்கி, ஆழ்ந்த அனுபவம் பெறுதல்!





பாசமில்லா சமாதி:- வெளக்கமும், தெய்வீகமும் (கலக்கம் மயக்கம்) அற்றநிலையே, சகஜ சமாதியாகும்! இது எந்தவித முயற்சியும் பயிற்சியும் இல்லாமல், இலகுவாகவும், இயல்பாகவும், இயற்கையாகவே "அது" ஆகவே, இருத்தலாகும்! இங்கு ஆரம்ப பயிற்சியில், அனுபவித்த, நிர்விகல்ப சமாதி என்பது, ஸங்கல்ப விகல்பம், அற்றதாகும். அதாவது, கற்பனையின் "மனதும்"! குற்றம் குறையின், "எண்ணமும்" இல்லாத நிலையாகும்!

மேலே சொன்ன, இவ்விரண்டும், அற்றதான, பிரம்மானந்த, அனுபவத்தில், இருக்கும் போது:- நாமரூப, ஆவரண மயக்கம் இராது! இருக்க முடியாது! இருக்க இயலாது! அதே நேரம், அதனால் தோன்றும், தோஷமுண்மையான, விட்க்ஷேப கலக்கமும் இராது! இருக்கமுடியாது! இருக்க இயலாது! அங்கு எல்லாம் மண் என்ற பரமே! பரம் என்ற மண்ணே! என்ற உணர்வில், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என உணர்வு பெறமுடியும்!

—×—×—×—×—×—×—×—



உ

(62)

(22)

மனம் நின் சகஜ சொரூபமானால், அதுவே
மனம் மாண்ட (மனோநாசம்) நிலையாகும்!
மனம் மாண்ட நிலையே, ஜீவன் முக்தியாகும்!
இதை மனது ஒருமையுடன் செய்வாயாக!

---


இதில் ஓர் முக்கியம் என்னவென்றால்?
ஒன்றை விட்டால் தான் ஒன்றை பற்ற முடியும்! என்றும்,
ஒன்றை பற்றினால் தான் ஒன்றை விட முடியும்! என்றும்,
ஸ்ரீ மஹான்களின், அனுபவம் இருக்கிறது!

ஆகவே இங்கு ?

நீ "சகஜானுபூதி" பெற்றுவிட்டால்,
மனம் மாண்டு போகும் (மனோநாசமாகும்) என்றும்,

"அல்லது?"

உன் சாதனையால் "மனம்" மாண்டு போனாலே,
(மனம் மனோநாசமானாலே) சகஜானுபூதி பெற முடியும்!
என்றும், பொருள் கொள்ளலாம். இதன்
விளக்கம், எப்படி என்றால்?





பயன் கருதாமல் செய்த பலன் (புண்ணியம்)
முன் பூர்வ, ஜன்மங்களில் செய்து, அவை
ஒட்டு மொத்தமாக, இப்பிறவியில், உனக்கு
சாத்தியமாகி ↑ விட்ட "குறை" தொட்ட "குறை"
இருந்திருக்குமாயின், உன் சகஜானுபூதியால்,
உன் தோஷமனம், "வடு" இழந்திருக்கும், என
அறிக! ஆகவே இங்கு உன்மனமானது, அதிக
முயற்சி, பயிற்சி, பண்ணாமலேயே, இயல்பாகவே
வெய்யிலின் மஞ்சு என, மறைந்துவிடும்.
அல்லது ?
உன் இச் ஜன்மாவில், உன் புண்ணியமும், உன்
ஆன்மநாட்ட, தேட்டமும், ஏக்கமும், உனக்கு
பக்கபலமாக இருந்து, கொண்டு, ஓர் ஸத்குருவை
காட்டியோ! அல்லது நீ தேடியோ! அவர் மூலமாக,
உன் சாதனை, முற்றுப் பெறும் போது, உன்மனம்,
மறைந்த என, தன்மையாகும், உன் சகஜானுபூதி,
இயல்பாக கூடி, பிரகாசிக்கும் என உணர்க!
இங்கு ஓர், அனுபவ வார்த்தையை, எழுதிப் போகிறோம்.



# உ



அதாவது:- "மனதொருமை"யுடன் செய்து! மனதை மாய்த்து, மனோக்தான முக்தியை பெறுவாய் என்றே!

மனஒர்மை என்றால்:- பிரம்மம் ஸத்தியம் என்றும், ஜகத் மித்தை என்பதையும், உறுதி நிச்சயம், சற்றும் வழுவாதிருக்க வேண்டும்! அடுத்த நிலையில், எல்லாம் "மண்ணே!" மண்ணுக்கும் அன்னிய எந்த தோற்றமும் இல்லை! எல்லாமே வந்து இருந்து மாறி, மறையக்கூடியதே! மேலும், பற்று வரவான் நிமித்தம், போக்கு வரவு, "ஒழுங்காக" நீ அமைதியாக, ஆனந்தமாக, நடைபெறுகிறது நீயன்றி, பேதமோ பாரபக்ஷமோ, இல்லவே இல்லை. "அடங்கி" இருந்து அனுபவிக்கால், இதுவே மனதொருமையுடன், நீக்கும் நிலையாகும்! இதன் முக்கிய, லக்ஷியம், எல்லாம் மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே! மண்ணுக்கு அன்னியமாய், எதையும் இல்லை! ஆகவே இங்கு, வீண் மனச்சஞ்சலம் தேவையில்லை என்ற நிலையில், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என அடங்குவாயாக அடக்காதே!

—x—x—x—x—x—x—x—x—



# உ



(23) இயல்பான மௌனம் வேண்டும்! கட்டாய மௌனம் வேண்டாம்! அந்த மௌனகாலங்களில், கவலைபயம் இல்லாமல் இருக்க வேண்டும்! எங்கே?

"**தற்போதம்**" சூன்யமாக (அழிய) வேண்டும்.

"**தற்பதம்**" நிலை பெற வேண்டும்!

---

மௌனம் என்பது :- வாய் பேசாமல் அடக்கி, இருப்பது மௌனம் ஆகாது, நாம் "**அடங்கி**" இருப்பது மௌனம் ஆகும்!! அதாவது?

(A) ஸ்ரீபகவான் & குரு உணர்வோடு, அவன் செயலென்ற நிறைவோடு — எளிவாய் பேசலாம்!


(B) சள சள சள என்று பேசாமல் தேவைக்கு மட்டும் குறைவாக பேசலாம்!

(C) தடும், சுடும், கபட, வார்த்தை, பேசாமல், பிறர் மனதை புண்படுத்தாமல், நாவை கட்டிக்காக்கலாம்,

(D) "**தகா**" வார்த்தை பேசாதிருக்கலாம்!


(E) நன்மையையே எண்ண வேண்டும்! நன்மையையே பேச வேண்டும்! நன்மையையே செய்ய வேண்டும்!

இதுவே "**மௌனம்**" ஆகும்!





இந்த மௌனத்தை, இக்கலியுகம் ஏற்காது
என்பது சத்தியமே!
இம்மௌனத்திறல், அளவற்ற தேவை நின்று விடும்
அளவற்ற உறவு துண்டிக்கப் படும்! அளவற்ற
பற்று பரவு, நிறுத்தப்படும்! இங்கு அவன்
திருவையாறல், உன் வரவும் செலவும்;
கணக்கிடப்பட்டு, உனக்கு உரியது கிடைக்கும்
தேவையில்லாதது, தானே நின்று விடும்!
இவை அனைத்தும், இதுகால பரியந்தம் உன்
வாழ்நாளில், அறியாத அனுபவியாத, ஒன்றாக
தோன்றும்! இது பெரும் "புதிராகவே"
தோன்று வதால்; மனைவிகிட பயம் உண்டாவது இயல்பே
இங்கு இவ்வுலகம், உன்னை விட்டு விடும்!
இவ்வுலகம், உன்னை விட்ட மறு கணம்; ஸ்ரீபகவான்
உன்னை, ஒன்றே ஆக வேண்டும்.
இது எப்படி நடைபெறும் என்றால்?
நீ "அடங்கினால்" உலகம் உன்னுள் அடங்கும்;
நீ "அடக்கினால்" உலகம் உன்னை அடக்கி விடும்
என்ற சத்திய வாக்கின்படி;



67

நீ உன் வாக்காலும், செயலாலும், நீ உன்னுள்

ஸ்ரீபகவானுள் அடங்கியே

இவ்வுலகம் உன் தெய்வீக எண்ணத்தினுள் அடங்கிவிடும்

உனக்கு அன்னியமாய், உலகமும், பொருள்களும், ஜீவகோடிகளும், இருக்க முடியாது! இருக்கக் கூடாது! இருக்க இயலாது! இந்நிலையில்தான், ஸ்ரீமஹான்களின்

"எல்லாம் நீயே" என்ற உயரிய வாசகம் பொருந்தும்.

இந்நிலையில் தான், உலகம் உன்னை விட்டாலன்றி, ஸ்ரீபகவான் ஏற்க மாட்டான் என்றும், ஏற்க முடியாது என்றும், ஏற்க இயலாது என்றும், சொல்லும் வாசகமானது, உலகமே இயற்கை! இயற்கையே உலகம்!

இயற்கையே இறைவன்! இறைவனே இயற்கை!

ஆகவே, உன் தூல சம்ரக்ஷணத்தை, அதுவாகிய, அவன் பார்த்துக்கொள்வானென, சொன்னதென், அதுவாகிய மண்ணே, மண்ணாகிய உடலைக் கவனித்துக் கொள்கிறது! ஆகவே இருப்பது ஒன்றே! நடப்பது அவமே என்பது சத்தியமே.



உ



சென்ற இதழ் தொடர்ச்சி:— இங்குழுதலில்,
சந்தேகத்தால், கலக்க பயம் வருவது இயல்பே.
அதற்காகத்தான், இந்த வார்த்தையை, போட்டார்
எம்பிரான்:— தற்போதம், அழிய வேண்டும்! என்றும்,
"தற்பதம்! நாம் ஆகவேண்டும்! என்றும்.
சொன்னார் அதாவது?
"ஈசன்நிதி"யின் பாடம் வேண்டாம்! என்றும்
"ஈசன்நாம்" ஆகவேண்டும்! என்றும்,
ஆகவேதான், விகல்பம் தீர்த்து (குற்றம் குறை பேதம்)
தற்பதம் என்ற, பரமாத்ம நிலைபெற வேண்டும்
என்பதே, கருத்தாகும். இங்கு குற்றம் குறை பேதம்
எனச் சொல்வது "ஈசத்துவம்"!
என்ற தொழில்! மகிமை! ஜீவவாஞ்சையும்!
இவை வேண்டாம் என்றும்; அவனே நாம்!
நாமே அவன்! என ஆகவேண்டும் என்பதே,
முக்கிய கருத்தாகும்!




(69)

உற்ற உணர்வு, பெருகி, அழுந்தால் நாம் நாமாக, இருப்போம். அங்கு நமக்கு அன்னியமில்லை.

(24) விறகு தீர்ந்தவுடன், அதைப் பற்றி எரியும் அக்கினி தானே, அடங்கி மறையும் தன்மை போல், மனதின் விகல்பமாக தோன்றும், வார்த்தையும், செயலும், அடங்கி அழிந்து விட்டால், பிரம்மமாகிய நாம், நாமாகவே இருப்போம்.

அம்ஸ் மண்ணுக்கு நாமரூபம், அனைத்தையும் அழித்து, தம் மண்ணுக்கும் சக்தி உண்டு. அதேபோல் ஜலத்திற்கும் நாமரூபம், அனைத்தையும் அழித்து, தம்மோடு (ஜலத்தோடு) கலக்கும், சக்தி உண்டு. ஆனால் அக்கினிக்கு, (நெருப்புக்கு) நாமரூபங்களை, எரித்து, தானாக்கும் சக்தியல்ல, அனைத்தையும் சாம்பல் (பஸ்பம்) ஆக்கும் சக்தி உண்டு. ஆனாலும் இரும்பையும், கல்லையும், சாம்பல் ஆக்க முடியாது தான். ஆனாலும் "பொழிபொழியாக்கி" நாமரூபம், அழிக்கச் செய்து, தாஸியாகவும்; ஜீவ அணுவாகவும், ஆத்மாவாகவும், ஆக்கும் சக்தி உண்டு. ஆகவே பஞ்சபூதங்கள், அனைத்திலும், நாமரூபங்களை, அழித்து இல்லாமலாக்க முடியும்.




நாமரூபங்கள் அழிந்தால், "அது அது" அதனதன் தன்மையை, (குணத்தை) இழந்து, தாஸியாகவும், ஜீவ அணுவாகவும், ஆத்மாவாகவும், "மாற" முடியும்! என்று சொல்வதை விட, காலாதீத "அதனுடைய" ஸ்வய சொரூபத்தை, இயல்பாகவே, அடைந்துவிடுகிறது.

அக்கினியானது, ஒன்றுடன் ஒன்று, உரசுவதால் தான், தோன்றும். அக்கினியானது, ஓர் நாமரூபத்தை, பற்றிக்கொண்டு விடுமேயானால், நாமரூபம், அழிந்து சாம்பல் ஆகும்வரை அதை விடாது. நாமரூபம், அழிந்தால், அக்கினிக்கு வேலை இல்லை. அது எப்படி, திடீர் என வந்ததோ, அப்படியே திடீர் என மறைந்து விடும்!

இதைப் போலவே?


ஸங்கல்ப விகல்பத்தால் (கற்பனையின் கூற்று உணர்வுகளால்) தோன்றும், "நாமரூப ஸிருஷ்டிகள்" ஜக ஜீவ, தோற்றங்கள் சர்வார்ப்பணம் என்றால், (எல்லாம் நீயே! எல்லாம் உன்னால் எல்லாம் உன்னுடைய தோற்றம்)



ஸ்ரீ பகவத் "ஞானத்தை" நன்றாக
ஆய்ந்து உணர்ந்து (பக்தியுடன் பக்குவப்பட்டபின்)
"ஸ்ரீ ஸத்குரு" என்ற, வெண்சால் (சூரிய
சக்தியை, வைத்துக் கொண்டு, (இயக்கம் இல்லாத
ஒரு ரூபமாக, இயக்கம் உள்ள, ஸ்ரீ பகவான்
இயங்கிக் கொண்டு) பிரம்மார்ப்பணம் என்னும்,
(எல்லாம் ஒன்றே! அது ரூபமே! அது சிவமே! அது யாகமே!)
"ஞானக்கினியால்" (வெண்சால்)
எரித்து, பஸ்பமாகி விடுகிறது!

குற்ற உணர்வு (அஞ்ஞானம்) இருக்கும் வரை,
ஞானக்கினிக்கு, வேலை உண்டு.

குற்ற உணர்வு (அஞ்ஞானம்) தீர்ந்த உடன்,
ஞானக்கினிக்கு வேலையும் இல்லை! இருப்பும் இல்லை!
இயக்கமும் இல்லை! ஞானக்கினி என்ற, யாகாக்கினி!
காடாக்கினி என்ற, அகண்டப் பேரொளியில்,
கலந்து மயமாகி விடும் என, அனுபவ ஸ்ரீ மஹான்கள்
சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன்!




இதிலிருந்து என்ன, உணர்த்தப் படுகிறது என்றால்?
நம் கவனக்குறைவால் (அஞ்ஞானத்தால்)
தோன்றிய நாடக கூறும், நாம ரூப, ஜக ஜீவ,
சொரூபங்கள் (பிறவிகள்) அனைத்தும்,
பக்தியால் (ஸ்ரீபகவான் என்ற சூரியனால்)
காய்ந்து உலர்த்தப்பட்டு, ஸத்குரு என்ற ஞான சூரியனால்
(வெண்ஸ்சுறைவ்) பஸ்பமாகி விடுகிறது எனவே,
"கதை கதை" யாக சாமான்யர்கள் பேசிக் கொள்கிறார்கள். அது மதிமயக்கமே
எல்லாம் பொய்யே!
இதனால் இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என சுருக்கமாக.

—×—×—×—×—×—×—

(25) லௌகீகத்திற்கு, புண்ணிய பாபம் உண்டு.
தெய்வீகத்திற்கு, ஸத்திய தர்மம் உண்டு.
பரமார்த்திகத்திற்கு, எந்த தர்மா தர்மங்களும்
இல்லவே இல்லை.

---

லௌகீக புண்ணிய பாபம், என்பது இரண்டும் ஒன்றே
ஓர்நாணயத்தின், இருபக்கம் போல் ஆகும்! புண்ணியமே
பாபமாய் மாறும்! பாபமே புண்ணியமாய் மாறும்.
இது "மாயை" பாவனையே தவிர வேறொன்றுமில்லை.
இவ்விரண்டும், பிறவியின் வித்து ஆகும்!



தெய்வீக, ஸத்திய தர்மம் இரண்டும், முறையே வாக்கும், செயலும் ஆகும். அதாவது, ஸத்தியம் பேசவேண்டும்! தர்மம் என்பது, ஸத்திய வாக்கை பக்குவ நிலை கண்டு, சொல்வது தர்மம் செய்வதாகும்! நாமரூப பொருள்களை, தர்மம் செய்வது, இரண்டாம் இடம் பெறுகிறது. இந்த ஸத்தியமும் தர்மமும் நிலை கண்டு; வாழ்க்கையின், பசுதியான பிறவியும்; தெய்வ பக்தியுள்ள, புனித பிறவியும், பதமுக்திக்கும், வழி வகுத்துக் கொடுக்கும்.

இந்த லௌகீகமும், தெய்வீகமும், பிறவா நிலை (ஜீவன் முக்தியை) தர முடியாது. ஆகவே, பரசொரூப ஸ்திதிக்கு, மேலே சொன்ன, இரண்டும் பொருந்தாது. இந்த பரசொரூப ஸ்திதிக்கு, எந்த தர்மா தர்மங்களும், இல்லவே இல்லை. இதுவே, ஜீவன் முக்தியாகும்! இவ்விரண்டும், விட்டால் மட்டும், ஜீவன் முக்தி பெற முடியும். மேலே சொன்ன அவ்விரண்டும், விட்ட நிலையில், "பட்ட" மரமனோனும் "குத்துக்" கல்லைப்போலும். அசைவற்று! உணர்ச்சியற்று! சும்மா இருத்தவாகும்! ஸ்ரீமஹான்கள் அனைவரும், ஏன் இந்த, குத்துக் கல்லையும், பட்டமரத்தையும், உதாரணம் சொல்கிறார்கள் என்று?






ஒரு "கல்லும்/மரமும்" (பட்ட) முறையே,
நாம ரூப, குண தோஷ, "பசையால்"
நினைவதும் (ஊறுவதும்) இல்லை, தெரிப்பதும் இல்லை,
இவ்விரண்டும், கால கதியினால், பொடிப் பொடியாகி,
துகளாகி, அணுவாகி, ஜீவ அணுவாகி,
ஆத்மாவாகி, பரமாத்மாவாகி, பரப்பிரம்மமும்,
ஆகி, தாம் தாமாக! நாமே அதுவாக! அதுவே
நாமாக! ஆகிவிடுகிறது. அந்த மனமற்ற நிலையில்.
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என இருப்பமாயாக!

---

26 (A) கணிக்கும் காலம் இல்லாததனால், காணும் காட்சி இல்லை!
(B) தூலம் இல்லாமையால், தொடரும் பவபந்தம் இல்லை!
(C) அஞ்ஞானம் இல்லாமையினால், மாயா இல்லை!
(D) நாமரூபம் இல்லாமையால், அதன் இருப்பு இல்லை!
(E) தோற்றம் இல்லாமையால், அழிவு இல்லை!
(F) நாமரூப வஸ்து இருந்தால், இது இப்படி இருக்கிறது
என சொல்லமுடியும்? ஸ்வசொரூபமன்றி, அரூபம் இல்லை!
(G) பதமோ! பரம பதமோ! பதார்த்தமோ!
எந்த நாமரூபமும், இல்லவே இல்லை.



(75)


(H) எந்த ஜக ஜீவ, பரம் (தேவ தெய்வங்கள்) இவைஎவையும், நாமரூபமாக இல்லை!

(I) இல்லை என்ற சொல்லும் இல்லை! இங்கு இருக்கிறது என்ற பொருளும் இல்லை! வாக்கால் சொல்லும், எப்பொருளும் இல்லை! மேலே கூறிய, இவை அனைத்தின் "சொற் பொருள்" ஓர் அணுவும் இல்லை!

(J) சும்மாவே சுகமாக, இருக்கும் "மௌனியாய்" பிரம்மானந்தம் "மேவியவனாய், அகண்டானந்தம் நாமே! என "முக்தி" சார்வாயாக!

(A) கணிக்கும் காலம் இல்லாததால், காணும் காட்சி இல்லை: — காணும் காட்சிகள், மண்ணாகிய பரமே இருப்பதால் காட்சியும் இல்லை! காட்சியின் காலங்களும் இல்லை! அங்கு அது பற்றி கற்பனை, பண்ணும் மனமும் இல்லை!

(B) விளக்கமான, அறியாமையின் மாந்தர், கூறும் சரீரமானது, மண்ணாகிய பரமே இருப்பதால், பவபந்தம் எனக்கூறும், வினைத் தொடர்பும் இல்லை!



(C) அறியா மாந்தர், எனக் கூறும், எவரும் இல்லை! காரணம் அனைத்தும், மண்ணாகிய பரமே! ஆகவே, மாயாவோ! மாயாமறைப்பின், அஞ்ஞானமோ இல்லை!

(D) ஜட கடபடாதிகள் (உலகம், ஜீவசரீரங்கள், தாவரவர்க்கங்கள்) எவையும் "நாமரூபமாக" இல்லை. எல்லாமே மண்ணாகிய பரமாகவே இருக்கிறது.

(E) தோற்றம் இல்லாததனால், இருப்பும் இல்லை! அதன் அழிவும் இல்லை:- விசித்திர தோற்றம், அனைத்தும் மனமய கற்பனையே. எண்ணினால் உண்டு! மறந்தால் இல்லை. இங்கு மனமே, இல்லாதிருக்கும் போது, பரமாகிய மண்ணே இருப்பதால், அது அதுவாகவே, இருக்கிறது. ஆகவே தோற்றமோ, இருப்போ, இல்லவே இல்லை!

(F) நாமரூப வஸ்து, இருந்தால், இது இப்படி இருக்கிறது, இருந்தது என, சொல்ல முடியும்? இங்கு "ஸத்தே ஸத்தாக" வந்து! ஸித்தே சித்தமாக வடிவெடுத்து, "ஆனந்தமாக" விளையாடியது! ஸத் ஸித் ஆனந்தத்தைத் தவிர, வேறு எந்த நாமரூபமே, இல்லவே இல்லை. அவை அனைத்தும் மண்ணாகிய பரமே ஆகும்!



உ


(77)

(ஏ) பூதமோ! பரம பூதமோ! பதார்த்தங்களோ!
எந்த நாம ரூபத்துடனும் இல்லை.
வரிவடிவ! வாக்கு வடிவ! பதஅர்த்தங்களோ!
“பதமுக்தி” எனப்படும், பரமபதங்களோ!
மோன, போன, பொருள்களான, “பண்ட”
பதார்த்தங்களோ! எவையும் எந்த நாம ரூபத்
துடன், இல்லவே இல்லை. எல்லாம் மண்ணாகிய பரமே!

(H) எந்த ஜக ஜீவ பரம், (தேவ தெய்வங்கள்)
இவை எவையும் நாம ரூபமாக இல்லவே இல்லை!
கோடானு கோடி, அண்டங்களும்! கோள்களும்!
அந்த சூர்ய சந்திராதிகளும்! பரமபத சொரூப
தேவ தெய்வங்களும்! தூலமாகவோ! சூட்சுமமாகவோ!
எந்த “நாமரூபமாக” இல்லவே இல்லை.
எல்லாம் மண்ணாகிய பரமே!

(|) இல்லை என்ற சொல்லும் இல்லை! இங்கு இருக்கிறது
என்ற, பொருளும் இல்லை! வாக்கால் விவகரிக்கும்
எப் பொருளும் இல்லை. இவை அனைத்தின்
சொற் பொருளும், ஓர் அணுவும் இல்லை!

(78)



ஒன்று இருந்து மறைந்தால், அது இல்லை எனலாம்!
மறைந்திருந்து பின் தோன்றினாலும், அது உண்டு எனலாம்!
ஒன்றும் வரவும் இல்லை! வந்து இருக்கவும் இல்லை!
இருந்து மறையவும் இல்லை! மாறி மறையவும் இல்லை!
மேலே சொன்னவைகளை, "வரி" வடிவிலோ!
"வாக்கு" வடிவிலோ! வரையவோ! சொல்லவோ!
முடியவே முடியாது! இயலாது! இல்லவே இல்லை!!!
ஆகவே அது இருந்தும் இல்லாததே! ஆகவே அதை இல்லை
எனச் சொல்லலாம்! ஒன்றுக்கும் உதவாது! உதவமுடியாது
ஒன்றும் இல்லையென்றால், சொல்ல முடியும். ஆனாலும்
ஒன்று இருப்பதைப்போல், தோற்றம் அனைத்து,
அண்டாண்ட பிண்ட பிரம்மாண்ட, ஜட கடபடாதிகள்
ஜீவஸ்வரூபங்கள், தேவ தெய்வ தோற்றங்கள்,
"எல்லாம்" அந்த ஒன்றுக்கு, அன்னியமாயில்லை.
அனைத்திலும், ஆதாரமாயும், ஆதரவாயும், ஆகாரமாயும்,
ஆனது அந்த ஒன்றே! "அது" இல்லாமல், இவைகள் இல்லை.
இவைகள் இல்லாமல் "அது" உண்டு,
என்பதே சத்தியம்!



(79)

ஒ சொல்லும் & பொருளும் என்றுவ், **நாமரூபம்** எனக்குறிக்கை என அறிக.

ஆகவே எந்த "**சொற் பொருளும்**"!
அதற்கும் பொருந்தாது என்பதை விட,
சொல்லும் இல்லை! பொருளும் இல்லை! ஆனால் அது உண்டு!

(J) சும்மாவே இருக்கை, மஹா மௌனியாய்!
பிரம்மானந்தம், மேவியவனாய்! அகண்டானந்தம்
"**நாமே என**" "**முக்தி**" சார்வாய்!
சொல்லும்! பொருளும் அற்று! வேண்டாச்
செயலும் அற்று! "**சும்மா**" இருப்பதுவே "**சுகம்**"!
என்ற ஸ்ரீமஹான்கள், அனுபவ வாசகப்படி,
சொல்லும் வாக்கும்! வாக்கின் பொருளும்!
பொருளின் தோற்றமும்! அற்றுப் போக வேண்டுமோ
எல்லாம் மண்ணே! மண்ணே எல்லாம்! மண்
ஆகிய பரமே! பரமாகிய மண்ணே! என அடங்கிறேன்
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! எனமுடியும்!




Abode of Love

You Are Everything!